# தீவிரமடையும் தமிழர் தேசத்தின் மீதான பண்பாட்டு இனவழிப்பு !



## வேண்டும் சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை

ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழர் தேசத்தில் சிங்கள பேரினவாத அரசினால் தொடரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பின் ஒரு பகுதியாக ஈழத்தின் பண்பாட்டு அடையாளங்கள் மீதான அழிப்பு தீவிர மடையத் தொடங்கியுள்ளன.




## அரசியல் தீர்வுக்கு பொது வாக்கெடுப்பு கோரும் குரல்கள் !


# ஈழமண்

www.eelamann.com January-2021


# சிறிலங்காவை சர்வதேச குற்றிவியல் நீதிமன்றில் நிறுத்துக

## ஒன்றுபட்டு ஒலிக்கும் தமிழர் குரல்

தமிழர் தேசத்தின் மீதான சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு போரின் போது, தமிழினத்தின் மீது இழைக்கப்பட்ட இனப்படுகொலை, மானிடத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலோ அல்லது அதற்கு சமனான சர்வதேச நீதிப்பொறிமுறையொன்றிலோ சிறிலங்காவைப் பாரப்படுத்த வேண்டும் என நிலமும் புலமும் ஒன்றுபட்ட ஒற்றைக்குரலா ஐ.நாவை நோக்கி தமிழர் தரப்பு கோரிக்கையினை முன்வைத்துள்ளன.

பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கு அமைவமாக பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ. நா. பொதுச்சபை, ஐ. நா. பாதுகாப்புச்சபை போன்றவை எடுக்க வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.




**தமிழர் தலைவிதி தமிழர் கையில்**

# சிறிலங்காவை சர்வதேச குற்றிவியல் நீதிமன்றில் நிறுத்துக...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

ஐ.நா மனித உரிமைச்சபையில் சிறிலங்காவுக்கு வழங்கப்பட்டிருந்த மேலதிக காலநீடிப்பு எதிர்வரும் ஐ.நா மனித உரிமைச்சபை அமர்வுடன் நிறைவுகாணவுள்ள நிலையில், சிறிலங்கா தொடர்பில் புதியதொரு தீர்மானமொன்று வர இருக்கின்ற நிலையிலேயே தமிழர் தரப்பு அத்தீர்மானம் தொடர்பிலான தமது எதிர்பார்ப்பினை கோரிக்கையாக முன் வைத்துள்ளன.

சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஐ.நா பாரப்படுத்த வேண்டும் எனதனது உறுதியானநிலைப்பாட்டுடன்215ம் ஆண்டுமே 5ம்நாள்மில்லியன்கையெழுத்து போராட்டத்தினை மேற்கொண்டிருந்த நாடுகடந்ததமிழீழ அரசாங்கம், 1.8 மில்லியன் மக்களது கையெழுத்துடன் அதனை வெற்றிகரமாக மேற்கொண்டிருந்ததோடு, இந்நிலைப்பாட்டினை ஓர் கருத்துவாக்கமாக சர்வதேச அரங் கில் தொடர்சியாக வளர்த் தெடுத்து வந்திருந்தது.







குறிப்பாக சர்வதேசசட்ட வாளர்கள் அவையம்,சிறி லங்காவை சர்வதேச குற்ற வியல்நீதிமன்றத்துக்கு பாரப்படுத்த வேண்டும் என தெரி வித்திருந்ததோடு, ஐ.நா மனித உரிமைச்சபையின் முன்னாள் ஆணையாளர் உசேன் அவர்களது அறிக்கையொன்றில் தமிழர்களின் ஒரு தரப்பினர் சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தில் பாரப்படுத்த வேண்டும் என கோருகின்றனர் என குறிப் பிட்டிருந்தார்.

இந் நிலையில் சிறிலங்காவை சர்வதேச குற்றிவியல் நீதி மன்றத்திலோ அல்லது அதற்கு சமனான சர்தேச நீதிப் பொறிமுறையொன்றிலோ ஐ.நா பாரப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு தாயகமும், புலமும் ஒற்றைக்குரலா ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருப்பது தமிழர்களின் நீதிக்கான செயல்முனைப்பில் புதிய தொரு நம்பிக்கையினையும் உற்சாகத் தினையும் மக்களுக்கு கொடுத்துள்ளது.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மீளநிகழாமைக்கு பொதுவாக்கெடுப்பு !

மீளநிகழாமை தொடர்பிலான முடிவினை எடுக்கும் அதிகாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கே வேண்டும் என ஐ.நா முகன்மைக் குழு நாடுகளுக்கு வலி யுறுத் திறுத் தியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், சிறிலங்காவை சர்வதேச




குற்றிவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தும் வகையில் புதிய தீர்மானம்அமையவேண்டுமென கோரியுள்ளது.

மானிடத்துக்கு எதிரான குற்றங்கள், போர்குற்றங்கள், இனப்படுகொலை மீள நிகழ் வதைத் தடுக்கும் பொருட்டு, பாதிக்கப்பட்ட தமிழ்மக்களே தமிழ்த் தேசிய இனச்சிக்கலுக் கான நிரந்தர அரசி யல் தீர்வினைக் காணும் வகையில் பொது வாக்கெடுப் புக்கான பொறிமுறை குறித்து ஐ.நா வின் மீளநிகழாமை தொடர்பிலான நிலைப்பாட்டில் அனுமதிக்கப்பட வேண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைச் சபையில் சிறிலங்கா தொடர்பில் தீர் மானமொன்றினை கொண்டு வரவிருக்கின்ற முகன்மைக் குழுவுக்கு (கனடா, ஜெர்மனி, பிரிட்டன், வடக்கு மாசிடானியா, மொண்டிநெக்ரோ) அனுப்பியுள்ள கடித்திலேயே நாடுகடந்த தமி ழீழ அரசாங்கம் இதனை வலி யுறுத்தியுள்ளது.

போரினால் விதைவைகளான 90,000 தமிழ்ப் பெண்களின் நிலைகுறித்தும், காணாமலாக்கப்பட்ட ஆயிரக் கணக்கான தமிழர் களின் நிலை குறித்தும், சட்டத்துக்குபுறம்பாகச் சிறைவைக்கப்பட்ட தமிழ்போர்க் கைதிகளின் நிலைமை குறித்தும், வெவ்வேறு காரணிகளின் முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு குறித்தும், இராணுவமயமாக்கல் குறித்தும், ஐ.நா மனிதவுரிமைகளுக்கான உயராணையர் அலுவலகத் திலிருந்து ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஐ.நா மனிதவுரிமைப் பேரவைக்கு தொடர்ந்து அறிக்கை சமர்பிக்க வேண்டும் எனவும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.

தாயக தமிழ் அரசியல் தரப்பு, சிவில் சமூகமும், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் ஆகியன எடுத்துள்ள ஒன்றுபட்ட நிலைப்பாட்டையும், சிறிலங்காவை சர்வதேச குற்றிவியல் நீதிமன்றத்துக்கு பாராப்படுத்துமாறு பரிந்துரை செய்துள்ள ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளரின் அறிக்கையினையும் நாடு கடந்ததமிழீழ அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை கீழ் வரும் விடயங்களை சர்வதேச நாடுகள் சிறிலங்கா தொடர்பில் கவனத்தில்எடுக்க வேண்டுமென வலி யுறுத்தியுள்ளது.

1) இனவழிப்புக் குற்றத்தைத் தடுத்தலும் தண்டித்தலும் பற்றிய உடன்படிக்கையின் கீழ், சிறிலங்கா அரசுக்கு எதிராக அனைத்துலகக் நீதிமன்றத்தில் ஒரு பொறுப்புக்கூறல் செயல் வழியை (சட்ட நடவடிக்கைகள்) நாடுகள் ஒவ்வொன்றும் தனித் தனியாகவும் கூட்டாகவும் தொடர வேண்டும்.

2) சர்வதேச குற்றங்கள் தொடர்பில், அதாவது இன வழிப்பு, மானிடத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் தொடர்பிலான உரிமையியல் (சிவில்) வழக்கு நடவடிக்கையிலும், நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தில் இருந்து வெளி அரசுகளுக்கு இறைமையின் அடிப்பமையிலான விதிவிக்கு (SOVERIREIGNTY IMMUNITY) சட்டக்காப்பு கிடையாது என்பதை உட்படுத்தி தங்களுடைய உள்நாட்டு




சட்டங்களில் உள்ள இறைமையின் அடிப்படையிலான விதிவிக்கு சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும்.

3) சர்வதேச குற்றங்கள் புரிந்த அரசியல், இராணுவதளபதிகளுக்கு எதிராக உலகளாவிய நியாயாதிக்கத்தின் அடிப்படையில் சட்ட நடவடிக்கைகள் தொடர வேண்டும்.

ஆகிய மூன்று கோரிக்கைகளை சர்வதேச நாடுகளை நோக்கி முன்வைத்துள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேலும் தெரிவிக்கையில்,

எந்தக் குற்றம் செய்தாலும் தண்டிக்கப்பட மாட்டோம் என்ற குற்றக்காப்பில் உள்ள சிறிலங்காவின் நெடிய வரலாறு, இப்பிராந்தியத்தின் அமைதிக்கு அச்சுறுத்தலாகும். மதச் சுதந்திரம் மீறப்பட்டதும், சைவக்கோயில் இடிக்கப்பட்டு அதனிடத்தில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டதும், யாழ் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டதும் வெகு அண்மையில் உலகின் கவனத்துக்கு வந்த நிகழ்வுகளாகும்.

தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதனை நீக்கம் செய்து, அவர்களின்தனித்துவத்தையும் தாயகத்தையும் அழிப்பதன் மூலம் அவர்களை தேசிய இன அடையாளத்தில் இருந்து சிறுப்பான்மை சமூகமாக சுருக்கின்ற செயற்பாட்டை சிறிலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் செய்கின்றது. முஸ்லிம்களும் தமிழர்களும் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வருவதில் இது வெளிப்படுகிறது.

கொரோனா வைரஸ் பெருந் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்மக்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கன உரிமை மறுக்கின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

## தமிழர் தரப்பின் ஒன்றுபட்ட கோரிக்கை இனநல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்குமாம் !

சிறிலங்காவை சர்வதேச குற்றி வியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற தமிழர் தரப்பின் ஒற்றைக் கோரிக்கை, இன வேறுபாடுகளைஅதிகப்படுத்தும்என்பதோடு இனநல்லிணக்கத்தைத் தடுக்கும் எனசிறிலங்காஅரசஉயர்மட்டஅதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு டெய்லிநியுஸ் ஊடகத்துக்கு கருத்து வெளி யிட்டுள்ள அவர்,தமிழர் தரப்பின் கோரிக்கைகள் பெரும்பான்மை சமூகத்தின் நிலைப்பாட்டை கடுமையாக்கும். எந்தவொரு ஜனநாயக நாட்டையும் புறக்கணிக்க முடியாது. தமிழர்கள் இதை உணர்ந்து, அனைத்து இலங்கையர்களின் விடுதலையும், இன அல்லது பிற அடையாளங் களைப் பொருட்படுத்தாமல், அபி விருத்தி பொருளாதார வளர்ச்சியில் இலங்கையர்களாக பங்கெடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். தமிழர் தரப்பின் தீவிர மான நிலைப்பாடு கடுமையான தாக்கத்தினையும் ஒருவித அச்சத்தினையும் சிறிலங்கா அரசதரப்பில் ஏற்படுத்தியுள்ளது. என்பதற்கு சான்றாகவுள்ளது.



தமிழினத்தின் மீது இழைக்கப்பட்ட இனப் படுகொலைக்கான பொறுப்புக் கூறலுக்கு சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற தமிழர் தேசத்தின் குரல், இன்று ஐ.நா மனித உரிமைச்சபையின் ஆணையளரது அறிக்கையில் வெளிப்பட்டுள்ளது. 'ஐநாவே! சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப் படுத்து' என்ற முழக்கத்துடன் 2015ம் ஆண்டு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் முன்கையெடுத்திருந்த மில்லியன் கையெழுத்து போராட்டத்துடன் கருத்துரு வாக்கமாக உருப்பெற்றிருந்தஇக்கோரிக்கை, படிப்படியாக தமிழர் தரப்புக்கள் அனைவரதும் முதன்மைக் கோரிக்கையாக மாறியுள்ளது.

தாயக தமிழர் அரசியல் தரப்புக்களிடம் இருந்து வெளிப்பட்ட கூட்டறிக்கை, பாதிக்கப்பட்ட மக்களதும், சிவில் அமைப்புக்களதும் அறிக்கைகள் யாவுமே ஆணையளரது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமையானதுநிலமும்,புலமும்ஒன்றுபட்ட நிலைப்பாட்டில் பயணித்தலின் அவசியத்தினைதமிழர்களுக்கு உணர்த்துகின்றது. சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்துங்கள் என

ஈழமணி
www.eelamann.com January-2021

# தமிழர்களின் பந்து இப்போது ஐ.நாவில் யாரிடம் ?

ஆணையாளர் தனது முக்கிய பரிந்துரையாக ஐ.நா அங்கத்துவ நாடுகளைக் கோரியுள்ளார்.

மனித உரிமைகளின்பாற்பட்டு நீதியின் குரலாக தனது நிலைப்பாட்டினை ஆணையளர் வெளிப்படுத்தியிருந்தாலும், முடிவினை எடுக்கும்அதிகாரம்அங்கத்துவநாடுகளுக்கேஉண்டென்பதுநிதர்சனம். அதாவது பந்து இப்போது வழமைபோலவே அங்கத்துவ நாடுகளிடத்தில் சென்றுள்ளது. அது இலங்கைத்தீவினை மையப்படுத்திய பூகோள அரசியல் ஆடுகளத்தில் சிக்குண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர்கள் மனித உரிமைகளின் நோக்குநிலையில் நின்று காத்திரமான நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதும், அங்கத்துவ அரசுகள் தமது நலன்களின் அடிப்படையில்மனிதஉரிமைகள்விடயத்தைக்கையாண்டு,அதற்கேற்ப பலவீனமானதீர்மானங்களைஎடுப்பதும்வழமையாகநடைபெறுமொரு விடயமாகும். ஈழத்தமிழ் மக்கள் மீதான சிறிலங்கா அரசின் இனவழிப்புத்தொடர்பான விடயத்திலும்நாம் இவ் அணுகுமுறையினை அவதானித்திருக்கிறோம். இத் தடவை யும் இதே அணுகுமுறையினை அங்கத்துவ அரசுகள் எடுத்துப் பலவீனமானதொரு தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைச்சபையில் நிறைவேற்றுவதற்கான நிலைமைகள் உண்டு. ஈழத்தமிழர் தேசம் இவ் விடயத்தில் தொடர்ச்சியாக விழிப்புடன் செயற்படவேண்டியது அவசியமாகும்.

இதேவேளை ஆணையளரது அறிக்கையுடன் தமிழர் தரப்பு திருப்பதி கொள்ளாமல், தமது கோரிக்கைக்கு கிடைத்த ஒரு கள வெற்றியாக கைக்கொண்டு, இலக்கினை நோக்கி பயணிக்க கடின மான உழைப்பு தேவைப்படுகின்றது. அங்கத்துவ நாடுகளிடம் சென்றுள்ள பந்தை, தமிழர்கள் தமது பக்கம் வீழ்த்த வேண்டிய அல்லது தமக்கச் சார்பாக வென்றெடுக்க வேண்டியது அவசியமாகின்றது.

இது இலகுவானதொரு செயலல்ல. சர்வதேச அரசியல் அரங்கில் தமிழர்கள் ஒரு தரப்பாக மாறாத வரையிலும் இதுஇலகுவானதல்ல. ஆனால் அதற்கான ஒரு வாய்ப்பினை ஜெனீவாக்களம் மீளவும் திறந்துள்ளது. குறிப்பாக சிறிலங்கா தொடர்பில் தீர்மானத்தினை முன்னெடுக்கின்ற கூட்டுநாடுகளில் கனடா, பிரித்தானியா ஆகியன முக்கியமான ஜனநாயக நாடுகளாக விளங்குவதோடு, இந் நாடுகளில் செறிந்து வாழும் தமிழர்களின் எண்ணிக்கை கவனத்தில் கொள்ளத்தக்கது.

இந்நாடுகளில் தமிழர்கள் என்ற அடையாளாத்துடன் சமூக, பண்பாட்டு தளத்தில் பெற்றுவருகின்ற அங்கீகாரத்தினை, அரசியல் சக்தியாக கைக் கொண்டு, அந்நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றங்களை கொண்டுவரக்கூடிய நிலையினை ஏற்படுத்த வேண்டும். இந்நாட்டு தலைநகரங்களில் எடுக்கின்ற முடிவுகள் 'ஜெனீவாவில்' எதிரொலிக்கின்ற நிலையினை ஏற்படுத்த வேண்டும். இதுவே அங்கத்துவ நாடுகளிடத் தில் சென்றுள்ள "பந்தினை" தமிழர்கள் வெற்றி கொள்வதற்கான உபாயங்களில் ஒன்றாகவுள்ளது.

# எம்.ஏ.சுமந்திரனின் கருத்து தமிழ் மக்களின் கருத்தல்ல !!



ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்கள் ஒற்றுமையாக செயற்படக்கூடிய சூழல் காணப்படுவதோடு, தமிழர்கள் ஒருபோதும் தனி நாடு கோரவில்லை என்பதோடு, தமிழீழக் கோரிக்கை தற்போது கிடையாது என்ற எம்.ஏ.சுமந்திரனின் கூற்று, தாயக தமிழ்மக்களது கருத்தாகவோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டைப்பின் கருத்தாகவோ எடுத்துக்கொள்ளமுடியாது எனநாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சர் சுதன்ராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் தொடர்பில் கனேடிய தமிழர் அமைப்பொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலின் போதே இக்கருத்தினை எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தாக செய்திகள் வெளிவந்திருந்த நிலையில் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் சுதன்ராஜ் இதனை தெரிவித்திருந்தார்.


மேலும் அவர் தெரிவிக்கையில், எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவிப்பது புதிதல்ல. வழமையான பல்லவிதான்.

இருப்பினும் தமிழ்மக்கள் தாங்கள் எந்த அரசியல் ஏற்பாட்டுக்குள் வாழ விரும்புகின்றனர் என்பதனை வெளிபடுத்துவதற்கான ஒரு பொதுவாக்கெடுப்பு தமிழர்களிடத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் இன்று அரசியல் தீர்வுக்கான கோரிக்கையாக வலுத்துவருகின்றது. தமிழீழம் உள்ளடங்க அனைத்து தீர்வுத்திட்டங்களையும் அதில் முன்வையுங்கள், எம்.ஏ.சுமந்திரனும் தனது முடிந்தால் தனது தீர்வுத்திட்டத்தை முன்வைக்கட்டும். மக்கள் பொதுவாக்கெடுப்பின் மூலம் தமது அரசியல் பெருவிருப்பினை அப்போது வெளிப்படுத்துவார்கள். அவ்வாறானதொரு நிலையினை ஏற்படுத்தாமல், இவ்வாறு கருத்துக்களை எம்.ஏம். சுமந்திரன் கூறுவது என்பது அவரது தனிப்பட்ட கருத்தாகவே எடுத்து கொள்ள வேண்டும்.

தமிழ்மக்களோ அல்லது தமிழ் அரசியல் தரப்புக்களோ தமது அரசியல் பெருவிருப்பினை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு தடையாகவுள்ள சிறிலங்காவின் ஆறாம் திருத்தச்சட்டத்துக்கு எதிராக எம்.ஏ.சுமந்திரன் போன்றவர்கள் தமது சட்டப்போராட்டத்தினை நடத்துவதுதான் தற்போதைய தேவை என கருதுகின்றேன் என அமைச்சர் சுதன்ராஜ் தெரிவித்திருந்தார்.

## தமிழக மீனவர்கள் படுகொலை:

### சுயாதீன விசாரணை கோரும் யாழ் பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியம்


கலைப்பீட மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
ARTS STUDENTS' UNION
UNINVERSITY OF JAFFNA

Patron
Dr.K. Suthakar
Dean
Faculty of Arts.

Senior Treasure
Dr.K.Kajavinthan
Senior Lecturer (Grade 1)

Email: artsstudentsunionuoj@gmail.com

President
Mr. P. Ujanthan

Vice President
Mr. K.Danisan

Secretary
Mr.R.Kopishanth

Junior Treasurer
Mr. N. Kajendran

Editor
Mr. S. Gowthaman

Committee
Mr. H. Heerthanan
Miss . S. Darshikashalini
Miss. P. Sangeertha
Mr. M. Jekaseelan
Mr. M.M.NajeeburRahman
Mr. S. Nitharsan
Mr. T. Vinsan
Miss. G. Amarasingha

27.01.2021

தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே தமிழக மீனவர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர் !

சமீபத்தில் இலங்கைதீவினை அண்டிய கடற்பரப்பில் தமிழக மீனவர்களது படகொன்று மூழ்கடிக்கப்பட்டிருந்ததோடு, அதில் இருந்த நான்கு மீனவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் எம்மை பெருங்கவலையில் ஆழ்த்தியுள்ளது. இச்சம்பவத்தில் தமது உறவுகளை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த காலங்களிலும் சரி இவ்வாறு தமிழக மீனவர்கள் இலங்கைதீவினை அண்டிய கடற்பரப்பில் இனவெறியர்களால் படுகொலை செய்யப்படுகின்றமையானது அவர்கள் "தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே இலக்கு வைக்கப்படுகின்றார்கள்" என்பதனை வெளிக்காட்டுகின்றது.

இயற்கையின் சீற்றங்களுக்கும், சவால்களுக்கு முகங்கொடுத்தவாறு கடலில் தமது தொழில்களை மேற்கொள்ளும் மீனவர்கள், எல்லை தாண்டுகின்ற சம்பவங்கள் பல்வேறு கடல்பிராந்தியங்களிலும் நடைபெறுகின்றன. குறிப்பாக இலங்கைத்தீவினை அண்டிய கடற்பரப்பில் எல்லைதாண்டும் மீனவர்களிடத்தில், தமிழ்நாட்டு மீனவர்கள் மட்டும் கடற்படையினரால் இலக்கு வைக்கப்படுகின்ற சம்பவம் இதனை நமக்கு உணர்த்துகின்றது.

குறிப்பாக இந்தியாவின் வெளியுறவுச் செயலாளர் மாண்புமிகு திரு. ஜெய்சங்கர் அவர்கள் வந்து சென்ற சில நாட்களிலேயே நடந்தேறிய இச்சம்பவம், இந்தியா மீதான சிறிலங்கா அரசின் வெறுப்புணர்வை வெளிப்படுத்துவதாக கருத வேண்டியுள்ளது. இந்நிலையில் கடற்படையினரது இந்த அத்துமீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைக்குழுவினை இந்திய மத்திய அரசு உருவாக்க வேண்டுமெனக் கோருகின்றோம்.

இதேவேளை, முகங்களை துணிகளால் மூடியவாறு எல்லைதாண்டும் இந்திய மீனவர்கள் நமது தாயக மீனவர்களது வலைகளை அறுக்கின்ற சம்பவங்களும், அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் சம்பவங்கள் தொடர்பிலும் எழுகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தமிழ்நாட்டு அரசு கூரிய கவனம் செலுத்த வேண்டுவதோடு, தமிழ்நாட்டு மீனவர்களுக்கும், தமிழர் தாயக மீனவர்களுக்கும் இடையிலான புரிந்துணர்வினை மேன்மைப்படுத்தும் வகையில் வலுவானதொரு உறவுப்பாலமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

P. UJANTHAN
President
Arts Students' Union
University of Jaffna
27.01.2021.

R. Kopishanth
Secretary
Arts Students' Union
University of Jaffna

தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் படுகொலை செய்யப்படுகின்றமையானது "தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே இலக்கு வைக்கப்படுகின்றார்கள்" என்பதனை வெளிக் காட்டுகின்றது எனத் தெரிவித்துள்ள யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் இது தொடர்பில் சுயாதீன விசாரணைக்குழுவினை இந்திய மத்திய அரசு உருவாக்க வேண்டுமெனக் கோரியுள்ளது.

இயற்கையின் சீற்றங்களுக்கும், சவால்களுக்கு முகங்கொடுத்தவாறு கடலில் தமது தொழில்களை மேற்கொள்ளும் மீனவர்கள், எல்லை தாண்டுகின்ற சம்பவங்கள் பல்வேறு கடல்பிராந்தியங்களிலும் நடைபெறுகின்றன. குறிப்பாக இலங்கைத்தீவினை அண்டிய கடற்பரப்பில் எல்லைதாண்டு மீனவர்களிடத்தில், தமிழ்நாட்டு மீனவர்கள் மட்டும் சிறிலங்கா கடற்படையினர் இலக்கு வைக்கப்படுகின்ற சம்பவம் இதனை உணர்த்துகின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தீவிரமடையும் தமிழர் தேசத்தின் மீதான பண்பாட்டு இனவழிப்பு !

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தமிழ்மக்களால்தொன்றுதொட்டு வழிபட்டு வரப்பட்ட முல்லைத்தீவு குமுளமுனை தண்ணி முறிப்பு குருந்தூர் மலை ஆதி ஐயனார் சூலம் உடைத்தெறியப்பட்டு, அங்கு பௌத்த சிதைவுகள் இருந்ததாக குறிப்பிட்டு அப்பகுதியினை அபகரித்த சிறிலங்காவின் தொல்லியத்திணைக்களம் புத்தர் சிலையொன்றினை நிறுவியிருந்தது.

இச்சம்பவம் சமீபத்தில் தாயகத்தில் மட்டுமல்ல உலகத் தமிழர்களிடத்திலும் பெரும் கொதிப்பினை ஏற்படுத்தியிருந்தது.

ஏற்கனவே முல்லைத்தீவில் இராணுவம் வழிபட வைத்த புத்தர் சிலைகளை காட்டி விகாரைகளை அமைத்தும், மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பெயராலும், தொல்பொருள் சிதைவுகளை ஆய்வு செய்தல் என்றும் தமிழர்களின் எல்லை கிராமங்கள் பல பௌத்தமயமாக்கல் ஊடாக அபகரிக்கப்பட்டு வருகின்றன. இவைகள் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் துணையுடன் நடைபெற்று வருகின்றன.



தமிழர்களுக்கு சொந்தமாக தமிழ் பெயர்களுடன் இருந்த கிராமங்கள், புதிதாக சிங்கள பெயர்களுடன் சிங்கள மக்களுக்கு சொந்தமானதாக மாற்றப்பட்டிருகின்றன.

நீராவியடிப் பிள்ளையார், வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் உட்பட இன்னும் சில எல்லைக்கிராம உள்ள ஈழத் தமிழர்களது வழிபாட்டு பண்பாட்டு அடையாளங்கள் ஆக்கிரமிப்பின் அடையாளங்களாக மாறியுள்ளன.

இதுவொரு பண்பாட்டு இனவழிப்பாக காணப்படுகின்றது என சுட்டிக்காட்டியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சிங்கள் பேரினவாத அரசின் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பின் ஒரு பகுதியாக இது இருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளது.

தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் துணையுடன் தமிழர் தேசத்தின் மீதான நில அபகரிப்பு, சிங்களமயமாக்கல், பௌத்தமயமாக்கலை சிங்கள பேரினவாத அரசு தீவிரப்படுத்தியுள்ள இவ்வேளையில் தமிழர் தேசத்தில் சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையொன்றின் அவசியத்தினை மீள நாம் வலியுறுத்துகின்றோம் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தொல்லியலை பாதுகாத்தல் என்ற பெயரில் தமிழர் பகுதிகளை அபகரித்தல், இராணுவத்துக்கு காணிகளை கையகப்படுத்தல் போன்ற தமிழர் பகுதிகளை குறுகச் செய்யும் நடவடிக்கைக்கு எதிராக மக்களை அணிதிரட்டி அதனை முறியடிக்க தமிழ் தேசிய கட்சி தலைமைகளும், சிவில் அமைப்புக்களும் இணைந்து பயனுள்ள போராட்டத்தை அல்லது நடவடிக்கையை ஆக்கபூர்வமாக சிந்தித்து முன்னெடுக்க தயாராக வேண்டும் என யாழ் உதயன் செய்தியாளர் பிரகாஸ் ஞானப்பிரகாசம் தனது சமூகவலைப்பதிவில் குறிப்பிடுகின்றார்.

# இலக்கு வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் பண்பாட்டு வழிபாட்டு அடையாளங்கள்

1. ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரம் ஆலயம்
2. மாந்தைகிழக்கு பத்திரகாளி அம்மன் கோவில்
3. குமாரபுரம் சிறீ சித்திரவேலாயுதம் முருகன் கோவில்
4. குமுழமுனை ஆஞ்சநேயர் கோவில்
5. பாண்டியன்குளம் சிவன் கோவில்
6. வவுனிக்குளம் சிவபுரம் சிறீமலை கோவில்
7. குமுழமுனை குறிஞ்சிக்குமரன் கோவில
8. மன்னார் திருக்கேதீஸ்வரக் கோவில்
9. மயிலிட்டி போர்த்துக்கேயர் கோவில்
10. ஒதியமலையில் வைரவர் கோவில்
11. முள்ளியவளை குமாரபுரம் முருகன் கோயில்
12. திருகோணமலை தென்னமரவடி கந்தசாமிமலை
13. செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயம்
14. புல்மோட்டை அரிசி ஆலை மலை கோவில்
15. வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம்
16. மூதூர், சூடைக்குடா மலைப்பகுதி முருகன் ஆலயம்
17. திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம்
18. மூன்றுமுறிப்பு கண்ணகி அம்மன்,
19. சிவபுரம் சிவாலயம்,
20. மாந்தை கிழக்கு ஆதிசிவன் கோயில்
21. குஞ்சுமப்ப பெரியசாமி கோவில்
22. ஸ்ரீ மலை நீலியம்மன் கோயில்
23. கல்லுமலை பிள்ளையார் கோவில்
24. மட்டக்களப்பு தாந்தாமலை ஆலயம்
25. மட்டக்களப்பு கச்சக்கொடி சுவாமிமலை
26. குருந்தூர் மலை ஆதி ஐயனார் கோவில்
27. மட்டக்களப்பு, சித்தாண்டி முருகன் ஆலயம்
28. கன்னியா வெந்நீர் ஊற்று
29. உருத்திரபுரம் சிவன் கோவில்
30. குசலமலை சைவ குமரன் ஆலயம்
31. காங்கேசன்துறை சைவ ஆலயம்
32. வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலயம்



மேற்குறிப்பிட்ட ஆலயங்களில், திருகோணமலை, கோணேஸ்வரம் கோவிலில், நிர்மாணிக்கப்பட்டு வந்த சகல கட்டுமானங்களையும், தொல் பொருளியல் திணைக்களம் 2015 ம் ஆண்டு முதல் தடுத்து வருகிறது . குறிப்பாக இந்தக் கோவில் வளாகத்தில் இருக்கின்ற கட்டுமாணங்களில் 99 சதவீதமானவை, சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. என்றும் அந்த இடம் பௌத்த மதத்திற்கு உரியது என்றும் அறிவித்து இருக்கிறார்கள் அதே நேரம் கிழக்கு மாகாண தொல்லியல் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் அவர்கள் திருக்கோணேஸ்வர ஆலயம் அனுராதபுர காலத்தில் கட்டப்பட்ட கோகண்ண விகாரை மீதே கட்டப்பட்டுள்ளது என்று உரிமை கோரி இருக்கிறார்

அதே போல திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீ மலை நீலியம்மன் கோயில் அழிக்கப்பட்டு கோவில் வளாகத்தில் பாசன பப்பாத ராஜமஹா விகாரை (Pashana Pabbatha Rajamaha Vihara) என்கிற பௌத்த ஆலயம் அமைத்து இருக்கிறார்கள்

இது மட்டுமின்றி திருகோணமலை மாவட்டத்தில் முகத்துவாராம் பிரதேசத்தில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வழிபட்டு வந்த குஞ்சுமப்ப பெரியசாமி கோவில் முழுமையாக அழிக்கப்பட்டு அந்த கோவில் இருந்த இடத்தில இப்போது “லங்கா பட்டுன சமுத்திரகிரி” என்கிற பெயரில் புதிய விகாரை ஒன்று கட்டப்பட்டு இருக்கிறது.

திருகோணமலையில் பட்டணமும் சூழலும் பிரதேசபை நிருவாகத்தில் இருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் மத்திய அரசின் தொல்லியல் திணைக்களத்துக்கு கீழ் கொண்டு வர பட்டு பௌத்த மத அடையாளங்கள் இருப்பதாக



உரிமை கோருகிறார்கள்

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை தென்னமரவடி கந்தசாமிமலை ஆலயத்தில் வழிபாடு நடத்த தொல்லியல் திணைக்களம் தடை விதித்து இருக்கிறது. கந்தசாமி மலை பௌத்த மத பூமி என உரிமை கோரி இருக்கிறார்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் சட்டவிரோதமாக புத்தர் சிலை ஒன்றை நிறுவி இருக்கிறார்கள் . நீதிமன்ற உத்தரவுகளை மீறி கோவில் வளாகத்தில் புத்த பிக்கு ஒருவரின் இறுதி கிரியைகள் நடத்தப்பட்டன

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாடுகள் நடத்த தொடர்ச்சியாக தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருவதோடு ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்

குருந்தூர் மலை ஆதி ஐயனார் கோவில் சூலத்தை அக்ற்றியதோடு நீதிமன்ற உத்தரவுகளை மீறி பௌத்த விகாரை ஒன்றை நிறுவும் வேலைகளை தொடங்கி இருக்கிறார்கள். குறிப்பாக இந்த ஆலய சூழலில் குருந்த அசோகராம என்கிற புராதன பௌத்த ஆலயம் இருந்ததாக தொல்லியல் திணைக்களம் உரிமை கோருகின்றது

காங்கேசன்துறையில் உள்ள சைவ ஆலயம் ஒன்று இடிக்கப்பட்டு ஆலய சூழலில் கெமுனு விகாரை என்கிற பெயரில் பௌத்த விகாரை ஒன்றை நிறுவி இருக்கிறார்கள்


மட்டக்களப்பு மாவட்டத்தில் குசலமலை சைவ குமரன் ஆலய சூழலில் பௌத்த மத அடையாளங்கள் இருப்பதாக பௌத்த பிக்குகள் உரிமை கோரி வரும் நிலையில் குறித்த ஆலயத்தின் முன் கதவு , மூலஸ்தான விக்கிரம் என்பன அடித்து நொறுக்கப்பட்டு இருக்கின்றன

சிறப்பு பக்கம்

# உலகத்தமிழர் பலமே தமிழர்சக்தி

## உலகத்தமிழர் பண்பாட்டை கொண்டாடிய நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் !


























தரணியெங்கும் வாழும் தமிழர்களின் பண்பாட்டை கொண்டாடும் விதமாக உலகளாவிய தமிழர் திருநாள் நிகழ்வினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சிறப்பாக முன்னெடுத்திருந்தது. தமிழர் தாயகம், தமிழ்நாடு, புலம்பெயர் நாடுகள் மட்டுமல்லாது தென்னாபிரிக்கா, மார்த்தினிக் தீவு, குவாட்லுப் தீவு, மியான்மார் என தரணியெங்கும் பரந்து வாழும் உலகத்தமிழர்கள் பங்கெடுத்திருந்த இணையவழி இந்நிகழ்வினை பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு இரசித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று சுகாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக மக்கள் திரள் நிகழ்வாக தமிழர் திருநாளினை முன்னெடுக்க முடியாபோதிலும், இணையவழி மூலமாக உலகத்தமிழர்களை ஒருங்கிணைக்கின்ற ஒரு வாய்ப்பாக இம்முறை தமிழர் திருநாள் அமைத்திருந்ததோடு, உலகத்தமிர்களின் ஒருங்கிணைந்த பலமே, தமிழர் தேசத்தின் நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான சக்தியாக அமையுமென நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் திடமாக நம்புகின்றது.

## இனப்படுகொலையாளிகளை வரிசைப்படுத்திய நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் !

### இல்லை என்ற சிறிலங்கா அரசாங்கம் !!




சிறிலங்கா தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளர் அலுவலகம் (2015) நடத்திய விசாரணை OISL அறிக்கையில் அடையாளப்படுத்தப்பட்ட 18 சிறிலங்கா இராணுவ அதிகாரிகளை, இனப்படுகொலையாளிகளாக அடையாளப்படுத்தி நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கையேடு ஒன்றினை வெளியிட்டிருந்த நிலையில், தமது இராணுவத்தினர் போர்குற்றங்கள் ஒன்றிலும் ஈடுபடவில்லை என சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமல் குணரத்தன இதனை நிராகரித்திருந்தது.

அனைத்துலக இனப்படு கொலையை தடுப்பதற்கும், தண்டிப்பதற்குமான ஐ.நா பிரகடனத்தின் அனைத்துலக நாளிலில் (International Day of Commemoration and Dignity of the Victims of the Crime of Genocide ) வெளியிடப்பட்டது.

## ஈழத்தமிழர்கள் ஆடுபவர்களா ? ஆடப்படுபடவர்களா ?

### கருத்துப்பகிந்த எழுத்தாளர் குணா கவியழகன் !



இந்தியப் பெருங்கடல் அரசியலில் அரசியல் களத்தில் தமிழர்கள் ஆடப்படுபவர்கள் என்ற இடத்தில் இருந்து ஆடுபவர்கள் என்ற தளத்துக்கு செல்வது எப்படி என்ற தொனிபொருளில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் இளையோர் அமைப்பு அலைகள் நடத்திய இணைவழி கருத்தாடலில் எழுத்தாளரும், அரசியல் ஆய்வாளருமான குணா கவியழகன் பங்கெடுத்து கருத்துரைத்திருந்தார்.

சிறப்பு பக்கம்

# தமிழினவழிப்பு நினைவுத்தூபி அழிப்பு இனவாதப்பூதத்தின் மற்றுமொரு கோரமுகம் !



சிங்கள இனவாதப்பூதத்தின் இனவழிப்பையும், கோரமுகத்தையும் மெல்ல மெல்ல அகற்றும் முயற்சியின் ஒரு பகுதியாகவே யாழ் பல்கலைக்கழக நினைவுத்தூபி அழிக்கப்பட்ட சம்பவத்தை நோக்க முடியும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்திருந்தது.

இலங்கைத்தீவில் தமிழ்மக்கள் மீதான இனவழிப்பு என்பது சிறிலங்கா அரசின் ஓர் அரச கொள்கையாக இருந்து வருகின்றதொரு நிலையில், தமிழின அழிப்பினை நினைவுபடுத்தும் அடையாளங்கள், இரத்தம் தோய்ந்த சிங்கள பேரினவாதத்தின் கோரமுகத்தை வெளிக்காட்டுபவையாக உள்ளன. இத்தகைய நினைவுச் சின்னங்கள் தமிழ்மக்களின் கூட்டு நினைவுகளில் சிங்கள ஆக்கிரமிப்பை என்றும் நினைவுபடுத்துபவையாகவும் உள்ளன. தமிழ் மக்களின் கூட்டு நினைவுகளில் இருந்து சிங்கள இனவாதப்பூதத்தின் இனவழிப்பையும், கோரமுகத்தையும் மெல்ல மெல்ல அகற்றும் முயற்சியின் ஒரு பகுதியாகவே யாழ் பல்கலைக்கழக நினைவுத்தூபி அழிக்கப்பட்ட சம்பவத்தை நோக்க முடியும் எனவும் அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சமீபத்தில் தியாக லெப்.தீலிபனின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு விதிக்கப்பட்ட தடைகளாகட்டும், தமிழீழத் தேசிய மாவீரர் நாளுக்கு விதிக்கப்பட்ட தடைகளாகட்டும் யாவுமே சிங்களத்தின் தமிழினஅழிப்பு, தலைமுறை தலைமுறையாக தமிழ்மக்களின் கூட்டுநினைவுகளில் நிறைந்து தம்மைக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தும் என்ற அச்சம் சிறிலங்கா அரசுக்கு உண்டு என்பதனை வெளிப்படுத்தியது. மேலும் தமிழ் மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான அரசியல் வெளி இலங்கைத்தீவில் இல்லை என்பதனையும் வெளிக்காட்டியிருந்ததோடு, தமிழ் மக்களுக்கு தமது அரசியல் உரிமைக்காக போராடிய மாவீரர்களை மட்டுமல்ல, இனஅழிப்புக்கு உள்ளான மக்களை நினைவேந்துவதற்கும் உரிய அரசியல்வெளி இல்லை என்பதனையே வெளிக்காட்டுகின்றது எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

# ஐ.நா மனித உரிமைச்சபை விவகாரம்

## கனேடிய அரசுக்கு அழுத்தம் கொடுக்க தயாராகும் தமிழர்கள் !







ஐ.நா மனித உரிமைச்சபை விவகாரத்தில் கனேடிய அரசுக்கு அழுத்தம் கொடுகின்ற செயல்முனைப்பில் கனேடிய தமிழ்சமூகம் ஈடுபடத் தொடங்கியுள்ளது. இதற்கான செயல்முனைப்பினை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஒருங்குபடுத்தி முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது.

சிறிலங்காவை மையப்படுத்தி புதிய தீர்மானமொன்று கூட்டுநாடுகளால் ஐ.நாவில் கொண்டுவரப்படலாம் என்ற நிலையில், அக்கூட்டு நாடுகளில் ஒன்றாக கனடா காணப்படுகின்ற நிலையில், சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துகின்ற வகையில் தீர்மானம் அமையவேண்டும் என்ற கோரிக்கையினை வலியுறுத்தப்படுகின்றது.

ஐ.நா மனித உரிமைச்சபையும்... கனேடிய தமிழ்சமூகத்தின் வகிபாகமும்...என்ற தொனிப்பொருளில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டிருந்த இணைவழி கருத்தாடல் நிகழ்வில் இதற்கான செயற்திட்டங்கள் கலந்தாய்வு செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டது.

கனேடிய அரசுக்கு அழுத்தங் கொடுக்கும் வகையில், இணைவழியிலான **https://ctcja.com/** கையெழுத்து வேட்டை கனடா தமிழ்அமைப்புக்களின் நீதிக்கான கூட்டமைப்பினால் முன்னெடுக்கப்படுகின்றது.

## சிறிலங்கா செய்திகள்

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்? ஏற்றுக் கொள்ளமாட்டோம்! சிறிலங்கா கொந்தளிப்பு!!



இலங்கையில் இனப்படுகொலையோ அல்லது போர்க்குற்றங்களோ இடம்பெறாத நிலையில், இந்தப் பொய்க்குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் சிறிலங்காவை எப்படி நிறுத்த முடியும் என கேள்வியெழுப்பியுள்ள சிறிலங்காவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தன, சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையை சிறிலங்கா அரசு எந் தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள் ளாது என்பரோடு, ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானங்களின் இணை அனுசரணையிலிருந்து சிறிலங்கா அரசு விலகியுள்ள நிலையில், புதிய பிரேரணை மூலம் எம்மை எவரும் அச்சுறுத்த முடியாது என கொந்தளித்துள்ளார்.

ஐ. நா. பொதுச்சபையிலும், ஐ. நா. பாதுகாப்புச் சபையிலும் சிறிலங்காவை இறுக்க எமக்கு ஆதரவு வழங்கும் உறுப்பு நாடுகள் இடமளிக்காது.

சிறிலங்கா, சர்வதேச அரங்கில் பலம் இழந்த நாடு அல்ல. இது பலம் பொருந்திய நாடு. எமது நாட்டின் இறையாண்மைக்கு சர்வதேச நாடுகள் மதிப்பு வழங்கும். எம்முடன் எந்த நாடும் இதுவரை முட்டிமோதவில்லை.

நாமும் எந்த நாட்டையும் பகைக்கவில்லை. எனவே, சிறிலங்கா சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன் நிறுத்த வேண்டும் என்ற தமிழர் தரப்பின் கோரிக்கையினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் அடியோடு நிராகரித்து, அந்த யோசனை வரைபைத் தூக்கி வீச வேண்டும் எனவும் கொந்தளித்துள்ளார்.

# முஸ்லீம் மக்கள் தொகை அதிகரித்து விட்டதாம்! பௌத்த தேரர்கள் எச்சரிக்கை



இலங்கையில் தமிழ், சிங்கள மக்களின் சனத்தொகையை காட்டிலும் முஸ்லிம் மக்களின் சனத்தொகை அதிகரித்து வருவதோடு, எதிர்காலத்தில் முஸ்லிம்களே அதிகம் நன்மையடைவர் என தேசத்தை பாதுகாக்கும் தேசிய அமைப்பு அதிபருக்கு ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளது.

நாட்டின் சனத்தொகை அடிப்படையில் பார்க்கையில் முஸ்லிம் மக்களின் சனத்தொகை அதிகரித்து வருகின்றது என தெரிவித்துள்ள இந்த அமைப்பு, சட்டத்துறையிலும் முஸ்லிம் சமூகத்தினர் அதிகளவில் ஈடுப்பட்டுள்ளார்கள்.

எதிர் காலத்தில் காவல்துறையிலும் இந்த அதிகரிப்பு வருமானால் அரசியலமைப்பிற்கும், நாட்டு மக்களுக்கும் துரோகம் இழைக்கும் செயலாகும் என இந்த பௌத்த அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் அந்த பௌத்த அமைப்பு தெரிவிக்கையில், முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களுக்கு பொறுப்பான அமைச்சின் ஊடாக இலங்கை நுகர்வோர் அதிகார சபை, துறைமுக அதிகார சபை ஆகியவற்றுக்கு தமது இனத்தவர்களுக்கு அதிக தொழில் நியமனங்களை வழங்கியுள்ளார்கள். குறுகிய காலத்தில் முஸ்லிம் சமூகத்தினர் சட்டக்கல்லூரிக்கு அதிகளவில் உள்வாங்கப்பட்மை சந்தேகத்துக்குரியது. அத்துடன் நீதிமன்ற சேவை மொழிப் பெயர்ப்பாளர்களாகவும் செயற்படு கிறார்கள்.

இஸ்லாமிய அடிப்படைவாத்துக்கு சார்பான அமையும் மற்றுமொரு செயற்பாடாக இதனை கருத வேண்டும்.

பாரம்பரிய முஸ்லிம் சமூகத்தினருக்கு எதிராக நாம் செயற்படவில்லை எனவும் பௌத்த பேரினவாத இந்த அமைப்பு தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடதக்கது.

# சர்வதேச ஊடகங்களின் பார்வையில் மீண்டும் சிறிலங்கா


US prompts new “human rights” resolution to push Sri Lanka to line up against China

Pradeep Ramanayake, K. Ratnayake

18 January 2021

According to Colombo media reports, a “Core Group on Sri Lanka” is planning to present a new resolution to the UN Human Rights Council (UNHRC) on human rights issues. This group includes Britain, Canada, Germany, North Macedonia and Montenegro.

By all indications Washington is behind the move intended to press Sri


iPOLITICS

Politics Policy Opinions Briefs INTEL Podcasts COVID-19 Events

OPINIONS

Canada should refuse to accept Sri Lankan Air Marshal Dias as high commissioner

By Sarah Teich and David Matas. Published on Jan 7, 2021 3:53pm

'If Dias showed up in Canada as a private individual, one could argue he would be prosecutable under this country's Crimes Against Humanity and War Crimes Act.'

மனித உரிமை மீறல்கள், ஐ.நா மனித உரிமைச்சபை தீர்மானம், சீனாவை மையப்படுத்தி கொழும்பு துறைமுக தென் முனையம் உட்பட பல்வேறு விடயங் களில் சிறிலங்கா மீண்டும் சர்வதேச ஊட கங்களின் பார்வைக்குள் வந்துள்ளமையினை அவதானிக்க கூடியதாக வுள்ளது.

போரின் ஓய்வுக்கு பின்னராக மகிந்த ராஜபக்ச அதிபராக இருந்த காலத்தில் சிறிலங்காவுக்கு அழுத்தம் கொடுக்க மேற்குலக நாடுகள் முற்பட்ட வேளை இவ்வாறான நிலைமையே சர்வதேச ஊடகங்களில் காணப்பட்டிருந்தன. மீண்டும் அவ்வாறனதொரு நிலை சர்வதேச ஊடங்களில் காணப்படுகின்றமை, சிறிலங்கா சர்வதேசத்தின் கண்காணிப்புக்குள் மட்டுமல்ல, சிறிலங்காவை நோக்கிய ஓர் சர்வதேச அழுத்தம் நெருங்கி வருகின்றது அல்லது காணப்படுகின்றது என அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

சர்வதேச ஊடகங்களின் பார்வையில் சிறிலங்கா தொடர்பில் காணப்படுகின்ற விமர்சன பார்வையினை தமிழர் தரப்பு தமது பிரச்சாரங்களுக்கான ஓர் கருவியாக பாவிப்பது கெட்டித்தனமான செயல் எனவும் அவதானிகள் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக தமிழர் மீதான சிறிலங்காவின் பாரிய மனித உரிமை விவகாரத்தினை மீளவும் கையில் எடுத்துள்ள மேற்குலக சக்திகளுடைய நிலைப்பாடு என்பது அவர்களுடை நலன்கள் தொடர்பிலானது. ஆனால் தமிழர்களுடைய நலன்களை அடைவதற்கான புள்ளியாக இதனை கையாண்டு அடுத்த கட்டத்தினை நோக்கி செல்ல வேண்டியது மட்டுமல்ல, சர்வதேச அரங்கில் சிறிலங்காவை தனிமைப்படுத்துவதற்கான வாய்ப்பாக, சிறிலங்கா சர்வதேச ஊடக செய்திகளை கைக்கொள்ள வேண்டும் எனவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த பத்து மாதங்களாக கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த விமான நிலைங்கள் மீளவும் சர்வதேச உல்லாசப் பயணிகளுக்கான திறந்து விடப்பட்டுள்ள நிலையில், சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கும் வகையிலான ஊடக பிரச்சாரங்களும் சமவேளையில் சர்வதேச பயண ஊடகங்களில் காணப்படுகின்றது.


NIKKEI Asia

Location Business Markets Tech Politics Economy Features Opinion Life & Arts Asia300

POLITICS

Sri Lanka stokes Muslim and Christian ire with COVID burial rules

Rajapaksa's forced cremations of minority victims worsen human rights record




VOA

Daughter of Slain Sri Lankan Journalist Files UN Complaint


ARAB NEWS

SAUDI ARABIA MIDDLE EAST WORLD BUSINESS SPORT LIFESTYLE


Outcry in Sri Lanka over cremation of Muslim coronavirus victims




economynext
An Echelon Media Company

Biden-Harris: What's in store for Sri Lanka?

BY HIMAL KOTELAWALA | Wednesday January 20, 2021 02:47


ThePrint

POLITICS GOVERNANCE ECONOMY DEFENCE INDIA FEATURES OPINION EVENTS VIDEO MORE

India will always be dependable partner & reliable friend of Sri Lanka, says Jaishankar

Addressing a media briefing, Jaishankar added that the pandemic has not been able to dent the bilateral ties and that the two countries are now looking at post-Covid cooperation.



# தாய்நிலம்



# மன்னாரை கண்வைத்துள்ள ஒஸ்றேலிய நிறுவனம் ! ஆபத்தில் தமிழர் தேசத்தின் வளங்கள் !!









மன்னார் தீவுக்கடலில் பெற்றோல் உண்டு என்ற கதை யாடல் மட்டுமல்ல, பெட்ரோலிய ஆய்வுகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்களை சிறிலங்கா அழைந்திருந்தமை எல்லாம் நாம் அறிந்த செய்தி.

ஆனால் மன்னார் தீவின் கனியவளங்கள் மீது வெளிநாட்டு நிறுவனங்கள் குறிப்பாக ஒஸ்றேலிய நிறுவனமொன்று "கண்" வைத்திருப்பது மட்டுமல்லாது அவ்வளங்களை சத்தமில்லாமல் ஏற்றுமதி செய்துவருவதான தகவல்கள் தற்போது வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன.

26 கி.மீ நீளமும் 8 கி.மீ அகலமும் கொண்ட மன்னார்தீவின் மணலில் இல்மனைட் என்ற கனிய வளங்கள் உள்ளன. இக்கனிமம், வண்ணப்பூச்சுகள், மை, பிளாஸ்டிக் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்படும் மதிப்புமிக்க வெள்ளை நிறமியான டைட்டானியம் டை ஆக்சைட்டின் முக்கிய ஆதாரமாகவுள்ளமையே மன்னார் மீது கண்வைக்க காரணமாக அமைந்துள்ளது.

இது தொடர்பில் ஒஸ்றேலியாவின் முக்கிய ஊடகமான ABC செய்தி ஆய்வொன்றினை Mannar Island is a bird paradise that survived Sri Lanka's civil war. Now an Australian mining company wants its sand எனும் தலைப்பில் வெளியிட்டுள்ளது. (ஓஸ்றேலியாவில் குடிபெயர்ந்துள்ள மன்னாரைச் சேர்ந்த முஸ்லீம் பெண்ணொருவரை செய்தி ஆதாரமாக கொண்டு இச்செய்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, அப்பெண் சுற்றுச்சூழல் தொடர்பிலான விடயத்தில் விடுதலைப்புலிகள் மீதான தனது காழ்ப்புணர்வையும் அவர் வெளியிட்டுள்ளார் என்ற விமர்சனமும் பலரால் விமர்சனதுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இறால் பண்ணை வியாபார பிண்ணியைக் கொண்ட அவர், சுற்றுச்சூழல் தொடர்பில் அக்கறை கொண்ட தாக வெளிப்படுத்தியிருப்பதும் முரண்பாடனாகவும் அவதானிக் கப்பட்டுள்ளது.)

கடந்த 2017ம் ஆண்டு தொடக்கம் ஒஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்கள் சில இணைந்து மன்னார்மாவட்டத்தில்உள்ளஏராளமானபகுதிகளில்துளையிட்டு மண் திட்டுக்கள் மற்றும் மணல் தொடர்பாக கனியவள ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது. இவைகள் சிறிலங்காவின் மத்திய அரசின் நேரடி அனுமதியுடன் இடம்பெற்றனவே அன்றி, உள்ளூர் கனியவள திணைக்களத்திடமோ பிரதேச செயலகத்திடமோ அனுமதி பெறாமலேயே இடம்பெற்றிருந்தன.

இந்த ஆய்வுகள் ஊடாக 264.93 மெற்றிக் தொன் கனிய வளம் மன்னார் பகுதியில் இருப்பதோடு, அவற்றில் குறிப்பாக இல்மனைற் போன்ற விலை உயர்ந்த கனிய வளங்கள் தவிர ஆகாய விமானங்கள் தயாரிக்க பயன்படும் தைத்தானியம் உள்ளதாகவும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதுவே மன்னார் மீது கண்வைக்க காரணமாக அமைந்த நிலையில், ஒஸ்றேலியாவின் பெர்த் நகரை தளமாக கொண்டு இயங்கும் டைட்டானியம் சாண்ட்ஸ், ஒஸ்திரேலிய செக்யூரிட்டீஸ் எக்ஸ்சேஞ்ச் (ஏஎஸ்எக்ஸ்)க்கு ஸ்ரீனல் ஹோல்டிங்ஸ் லிமி டெட் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் ஊடாக மன்னார் தீவின் கனியவளங்களை இலக்கு வைத்துள்ளமை ஒஸ்றேலிய ஊடகத்தின் செய்தி ஆய்வின் மூலமாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

மன்னார் தீவின் 2 கி.மீ அகலமும் சுமார் 8 கி.மீ நீளமும் கொண்ட ஒரு பகுதியை தமது நிறுவனம் சுரங்கப்படுத்த எதிர்பார்பதாக டைட்டானியம் சாண்ட்ஸின் நிர்வாக இயக்குநர் ஜேம்ஸ் சியர்ல் கூறுகின்றார். வருடாந்திர அடிப்படையில் இது 10 முதல் 16 ஹெக்டேர் வரையிலான பிராந்தியத்தில் சுரங்ககழ்வாக இருக்கலாம் எனவும், இது அநேகமாக 30 ஆண்டுக்கு மேலான அகழ்வாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் சில இலங்கை விஞ்ஞானிகள் மற்றும் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் இந்த திட்டம் குறித்து தங்களுக்கு போதிய தகவல் கொடுக்கப்படவில்லை என ஒஸ்றேலிய ஊடகம் தெரிவித்துள்ளது.

இதனை எழுதிக்கொண்டிருக்கும் வேளை ஒஸ்றேலிய நிறுவனத்தின் கனியவள மண் அகழ்விற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மன்னாரின் சுற்றுச் சூழலை பாதுகாக்கும் அமைப்பும் இணைந்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தியுள்ள செய்தி வெளிவந்துள்ளது.

மன்னாரின் சுற்றுச் சூழலை பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைவோம், கடலில் தாழும் மன்னார் தீவை பாதுகாப்போம்,வெள்ளம் வரும் முன்னர் அணைகட்டுவோம், உள்ளிட்ட வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்திருந்தனர்.

கவனயீர்ப்பு போராட்டத்தின் ஊடாக இவ்விவகாரம் பொதுமக்களின் கவனத்தினை ஓரளவு பெற்றுள்ளது என உணரக்கூடியதாக இருந்தாலும், தமிழர் தாயகத்தின் தமிழ்சமூக – அரசியல் வெளியில் இது தொடர்பிலான அவதானிப்பு, விழிப்பு போதியளவு இல்லை என்றே தெரிகின்றது. Change இணையத்தளமூலமாக இது தொடர்பிலான Stop planned sand mining that threatens Mannar Island's fragile eco-system மின்னொப்ப வேட்டையொன்றும் இடம்பெற்று வருகின்றது.

இக்கனியவள ஆய்வுக்காக 3704 வெவ்வேறு பகுதிகளில் ஆழமாக துளையிட்டு மணல் அகழ்வு செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. பெரும்பான்மை துளைகள் 1 முதல் 3 மீற்றர் வரை இருந்துள்ளது. 12 மீற்றர் வரையும் துளைகள் சென்றுள்ளது. இவைகள் உரிய அனுமதி இன்றியே இடம்பெற்றதாக சிறிலங்கா அரச ஒரு சில அதிகாரிகள் ஊடகங்ளுக்கு கூறப்பட்டாலும், அது தொடர்பிலான முறை யான விசாரணைகளோ, முறைப்படுத்தலோ ஏதம் நடந்துவிடவில்லை. வெளிநாட்டு நிறுவனங்களுடனான பேரங்களும், அரசுகளுக்கு இடையிலான திரைமறைவு உடன்பாடுகள் ஒருபுறமிருக்க ஆக்கிரமிக்கப்பட்ட தேசத்தின் மீது சுரண்டல்கள் என்பது ஆக்கிரமிப்பாளர்களின் பண்பாகவே உள்ளது.

கனிய வளங்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், தனது ஆய்வுகளை விரிவாக்கம் செய்தும் பணியிலேயே ஒஸ்றேலிய நிறுவனம் தொடர்ந்தும் ஈடுவதாக ஒரு தரப்பால் கூறப்பட்டாலும், அகழ்வு இடம்பெறுவதாகவே அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

"எங்கள் ஆய்வு பணிகள் வசிப்பிடம் இல்லாத மற்றும் செயலில் விவசாயம் இல்லாத பகுதிகளில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன." என ஒஸ்றேலிய நிறுவன அதிகாரி ஒஸ்றேலிய ஊடகத்துக்கு தெரிவித்துள்ளதோடு, கனிம மணல் சுரங்கமானது வேறு சில வகையான சுரங்கங்களுடன் ஒப்பிடும்போது சுற்றுச்சூழலில் மிகவும் குறைந்த தாக்கத்தையே கொண்டிருக்கும் என தெரிவித்துள்ளார்.

ஒஸ்றேலிய நிறுவனங்களுக்கு இது புதிதல்ல. வட ஒஸ்றேலியாவில் முன்னொரு காலத்தில் பெருத்த மனித வளத்துடன் நிலக்கரிக்களுக்காக ஒஸ்றேலிய பழங்குடி மக்களின் நிலங்களை அபகரித்து அகழ்ந்த ஓய்ந்த இந்நிறுவனங்கள், தற்போது புதிய தொழில்நுட்பத்துடன் புதிய புதிய கனிய வளங்களுக்கான அந்நிலங்களில் தோண்டி வருகின்றன. தங்கச் சுரங்கம் போன்ற தாதுக்களின் வேதியியல் பிரிப்பு அல்லது நிலக்கரி சுரங்களுக்கான தமது நிலங்கள் பறிபோவதற்கு எதிராக ஒஸ்றேலிய பழங்குடிகள் இன்றும் தொடர்சியான போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு கனியவளங்களில் ருசி கண்ட நிறுவனங்களில் ஒன்றுதான் தற்போது மன்னாரில் ருசி கண்டுள்ளது.

கடற்கரைகளுக்கு அருகில் சுரங்கப்பாதை கடலோர உருவ அமைப்பைத் பாதிப்பதோடு, மற்றும் தாவரங்களை அகற்றுவது மணல்திட்டுகளை அரிப்புக்குள்ளாக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக மன்னார் தீவகப் பகுதியானது கடல் மட்டத்தில் இருந்து சுமார் 1 தொடக்கம் 10 மீற்றர் வரையான அளவு கீழே அமைந்துள்ளது. மன்னார் கடல் எல்லைப் பகுதி களை சூழ்ந்துள்ள மணல் மேடுகளும் பவளப் பாறை;களுமே மன்னார் தீவுப் பகுதிக்குள் கடல்நீர் இதுவரை காலம் உட்புகாமலும் சுனாமி போன்ற பேரனர்த்தங்கள் தாக்காமலும் பாதுகாத்து வருகின்றன.

இத்தீவக பகுதியில் இருந்து அதிகளவான மணல் உள்ளூர் மற்றும் வெளியூர் நபர்களால் சட்டவிரோதமாக கடத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதான செய்திகளும் வெளிவந்தவண்ணமே உள்ளன என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

"கரையோரத்தில் உள்ள பகுதிகள் எங்களுக்கு எந்த ஆர்வமும் இல்லை, ஏனென்றால் அவை சுற்றுச்சூழல் உணர்திறன் கொண்டவை என்று நாங்கள் கருதுகிறோம். அருகிலுள்ள கடற்கரையிலிருந்து ஒன்று முதல் மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள உட்புறத்தில் நாங்கள் அதிக அக்கறை கொண்டுள்ளோம்." என ஒஸ்றேலிய நிறுவன அதிகாரி தெரிவிக்கின்றார்.

இலங்கைதீவின் மழை பெய்யும் அளவீட்டில் மன்னார் பகுதியே குறிப்பிட்டளவு மழையினை கொண்ட பகுதியாக காணப்படுவதோடு, நிலத்தடி நீரை மட்டுமே நம்பியிருக்கும் நிலையே காணப்படுகின்றது. இந்நிலையில் இந்த அகழ்வு நிலத்தடிநீரை பாதிக்கும் என்ற குற்றச்சாட்டுக்களும் காணப்படுகின்றன.

நிலத்தடி நீரை பாதிக்கும் என்றால், நாங்கள் அதை செய்ய மாட்டோம் எனக்கூறும ஒஸ்றேலிய நிறுவனம், 200 முதல் 600 பேருக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் என்றும், அதில் 95 சதவீதம் பேர் இலங்கையர்களாக இருப்பார்கள் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.


"மன்னார்தீவின் பூர்வீக குடிகளாகிய நாம், எமது மண்ணை அந்திய நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய ஒரு போதும் அனுமதி யோம்" என கனிமளவள அகழ்வுக்கு எதிரானா கவனயீர்ப்பு போராட்டத்தின் போது சிறுமி ஒருவரினால் பிடிக்கப்பட்டிருந்த வாசகமாகவுள்ளது.

ஒருபுறம் தமிழர் தேசத்தினை ஆக்கிரமிப்புச் செய்துள்ள சிங்கள பேரினவாதம், பொதுமக்களின் காணிகளை அபகரிப்புச் செய்வதும், தொல்பொருள் திணைக்களம் போன்ற தனது திணைக்களங்கள் ஊடாக தமிழர் நிலங்களை அபகரித்து வருவதும் தொடர்கதையாக இருக்கின்றது.

மறுபுறம் தமிழர் தேசத்தின் வளங்களை இலக்குவைத்து தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்வதும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கூறுபோட்டு விற்பனை செய்வதும் தொடர்கதையாக இருக்கின்ற நிலையிலேயே தமிழர் தேசத்தின் கனிய வளங்கள் மீதான இலக்குகள் வெளிச்சத்துக்கு வருகின்றன.

தாயகம் மட்டுமல்ல, புலம்பெயர் தமிழ் சமூக–அரசியல் செயற்பாட்டாளர்கள் தேசமாக சிந்தித்து தேசத்தின் வளங்களை காக்கவும், இதற்கு எதிராக உரக்க குரல்களை ஒலிக்கவும் வேண்டிய தேவை உடனடியாகவுள்ளது.





# அரசியல்தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பு கோரும் குரல்கள் !

தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு பொதுவாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகின்றது.

சமீபத்தில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமது பிள்ளைகளைத் தேடும் தாய்மார்களின் அமைப்பு, ஐ.நா மனித உரிமைச்சபை நாடுகளுக்கு சமீபத்தில் அனுப்பியுள்ள கோரிக்கையிலும், தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு சர்வதேசத்தின் பிரசன்னத்துடன்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் அவர்கள், தமிழர்கள் இணைந்துவாழமுடியாது என்பதை உணர்த்த, பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா படைகளினால் வலிந்து காணாமலாக்கப்பட்ட பொதுவாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டும் என கோரியுள்ளனர்.

பரிகார நீதிக்கான செயல் வழிப்பாதையில் சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும், அரசியல் தீர்வுக்கான பொறிமுறையாக பொதுவாக்கெடுப்புக்கான கோரிக்கையும் சமவேளையில் வலுத்துவருகின்றது.




ஐ.நாவின் ஏற்பாட்டில் பொதுவாக்கெடுப்பு நடத்துமாறும் கோரும் தீர்மானமொன்று முன்னராக வட மாகாண சபையில் ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. தமிழீழ மக்கள் தமது அரசியல் இறைமையினை வெளிப்படுத்தும் ஜனநாயக வழிமுறையாகவே பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என முன்கையெடுத்து வரும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது பொதுவாக்கெடுப்புக்கான மக்கள் இயக்கதினை தோற்றுவித்தும் இருந்தது. தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வாக தமிழீழத்தனியரசு உட்பட்ட அனைத்து தீர்வுத்திட்ட முன்மொழிவுகளும் தமிழீழ மக்களிடம் முன்வைக்கப்பட்டு, தாயகத்திலும், புலம்பெயர் தமிழர்களிடத்திலும் பொதுவாக்கெடுப்பொன்று நடத்தப்பட வேண்டும் என்பது பொது வாக்கெடுப்புக்கான மக்கள் இயக்கத்தின் நிலைப்பாடகவுள்ளமை இங்கு குறிப்பிடதக்கது.

# “வேரும் விழுதும்”

வாகரை பிரதேசத்திற்குட்பட்ட கட்டுமுறிவு தோணிதாட்ட மடுவிற்கான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 130 குடும்பங்களுக்கு 1500 முதல் 2000ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.









**தாயக தொடர்பாடல் அமைச்சு - நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்**

தொடர்புகளுக்கு :

கனடா : 00 1 647 783 34 66

பிரித்தானியா : 00 44 7519 654 794

ஜேர்மனி : 0049 160 637 2458

mail : pmo@tgte.org

# தாயகத்தில் தீவரமடைந்துள்ள நில அபகரிப்பு !

## நாம் என்ன செய்யப் போகின்றோம் ?



தமிழர் தேசத்தினை ஆக்கிரமித்துள்ள சிங்கள பேரினவாத அரசு, கடந்த பத்து ஆண்டுகளாக தமிழர் நிலங்களை அபகரித்து வரும் நிலையில், சமீபத்திய நாட்களில் தீவிரமாகியுள்ள நில அபகரிப்பினை தடுக்க நாம் என்ன செய்யப் போகின்றோம் என்ற கேள்வியினை சமூக வலைத்தளங்கள் ஊடாக பலரும் பதிவு செய்து வருவதோடு, தமது கோபத்தினையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

பெயரளவில் ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டாலும் தொடர்ந்தும் இராணுவம் பொதுமக்கள் காணிகளில் நிலைகொண்டுள்ளது. மறுபுறம் பல்வேறு தேவைகளின் பெயர்களில் தமிழர்களின் நிலங்களை சிங்கள அரச கட்டமைப்பானது அபகரித்து வருகின்றது. இதனை தடுப்பதற்கு எதிரான போராட்டங்கள் இடம்பெற்று வருந்தாலும், அது உடனடி நிவாரண மாக இருந்தாலும் நிரந்தரமான தீர்வாக இருந்தத்தில்லை. சிறிலங்கா நீதிமன்றத்தின் தடை உத்தரவுகள் ஊடாக சில அபகரிப்புக்கள் தற்காலிகமாக தடுக்கப்பட்டிருந்தாலும், அவைகள் நிரந்தரமானதாக இருப்பதில்லை. தடைகளையும் மீறி அபகரிப்புக்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.




"தமிழர் நிலத்தை அபகரிப்பதோடல்லாமல் தமிழர் மரபுரிமைகளை அழித்து திரிவுபடுத்தி சிங்கள-பௌத்த வரலாற்றியலையும், பூர்வீகத்தையும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவது எமக்குத் தெரி யாததல்ல.




ஈழத்தமிழ் பௌத்தம் வடக்கு-கிழக்கில் இருந்த தற்கான வரலாற்று ஆதா ரங்கள் இருக்கின்ற போதும், ஈழத்தமிழ் பௌத்த வர லாற்று, தொல்லியல் எச்சங்களை வெறுமனே சிங்கள-பௌத்த வர லாற்று எச்சங்களாக மாற்ற முனைவது சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் அடிப்டைக் கோரிக்கைகளை வலுவூட்டுவதாக அமையும்.

சிங்கள - பௌத்த பூர்வீகத்தின் இருப்பையும் தொல்லிய லையும் சிங்கள பௌத்தத்தின் வரலாற்று எச்சங்களாக பிரதி நிதித்துவப்படுத்துவதன் மூலம் ஈழத்தமிழின இருப்பின் தேசத்திற்கான அடையாளங்களை வரலாற்று மலி னம் செய்ய சிங்கள அரசு முனைகின்றது. ஈழத்தமிழரை தேச நீக்கம் செய்வதன் மூலம் ஈழத்தமிழர்களின் தாயக கோட் பாட்டை சிதைத்து ஈழத்தமிழர்கள் தேசத திற்குரியவர்கள் என்ற அரசியல் கோரிக்கையை நிராகரிக்க முயல்கின்றது." என தமிழர் மரபுரிமைப் பேரவையின் முன்னைய அறிக்கை இவ்வேளையில் ஞாப கம் கொள்ளத்தக்கதாகவுள்ளது.

"தற்போதைய நிலையில் தமிழர்களிடம் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களைத் தவிர வேறு எந்தவொரு பலமும் இல்லை. பாராளுமன்றத்தில்உரத்துப் பேசுவதற்கு அப்பால் என்ன செய்யலாமென்று சிந்திக்க வேண்டும். புத்தாக்கம்மிக்க வழி முறைகளை கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால், புத்தர் சிலைகளின் உற்பத்தி – காணி பறிபோ தல் தொடரும்.ஒன்றை தொடரவிட்டுக் கொண்டு கண்டனங்களை வெளியிட்டுக்கொண்டிருப்பதால் எந்தவொரு பயனு மில்லை." என தாயகத்தில் இருந்து வெளிவ ரும் ஈழநாடு பத்திரிகை தனது ஆசி ரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு நில அபகரிப்புக்களுக்கு பின்னால் உள்ள சிங்கள அரசின் நிகழ்ச்சி நிரல் உணரப்பட்டாலும் இதனை தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறை என்ன என்ற கேள்வி பலமாக எழுந்துள்ள நிலையில், "மக்கள் போராட்டமே இதனை தடுப்பதற்கு ஒரு வழியென" கே.சிவாஜிலிங்கம் தெரிவிக்கின்றார். நில அபகரிப்புக்கான முனைப்புக்கள் இடம்பெறும் இடங்களில் உடனடியாக பிரச்சன்னமாகி தனது வலுவான எதிர்ப்பினை வெளிப்படுத்தி வரும் கே.சிவாஜிலிங்கம், "சிறுதிரள் போராட்டங்களுக்கு அப்பால் தாயகமே ஸ்தம்பிக்கும் அளவுக்கு பெருந்திரள் மக்கள் போராட்டமாக மாறினால்தான் இதனை தடுக்க முடியும்" என குறிப்பிடுகின்றார்.

"சிறிலங்கா அரசு தனது அரசாங்க திணைக்களங்கள் ஊடாக பல்வேறு பெயர்களிலும் தமிழ் மக்களின் நிலங்களை அபகரித்துக் கொள்வதும் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதும் மட்டுமல்லாது தமிழ்மக்களின் பண்பாட்டு அடையாளங்கள் மீதான பண்பாட்டு இனவழிப்பினையும் (Cultural genocide) தொடர்ந்து தனது கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பின் ஒரு பகுதியாக செய்து வருகின்றது.


தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தின் துணையுடன் தமிழர் தேசத்தின் மீதான சிங்களமயமாக்கல் பௌத்த மயமாக்கலை சிங்கள் பேரினவாத அரசு தீவிரப்படுத்தியுள்ள இவ்வேளையில் தமிழர் தேசத்தில் சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையொன்றின் அவசியத்தினை மீள நாம் வலியுறுத்துகின்றோம்" நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவிக்கின் றது.




2009க்கு முன்னரான சமாதான காலத்தில் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியனவற்றின் பிரச்சனம் தாயகத்தில் இருந்தது போன்று, தமிழர் தாயகத்தின் தற்போதைய நிலைமைகளை கண்காணிக்க சர்வதேச பாதுகாப்பு பொறிமுறை யாக சர்வதேச கண்காணிப்பை இது வலி யுறுத்துகின்றது.

குறிப்பாக ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளர் அலுவலகம், இலங்கையில் தொடர்ந்து நடைபெறுகிற மீறுதல்களை கண்காணிக்க நேரடி அலுவலகமொன்றை நிறுவ வேண்டும் சமீபத்தில் ஐ.நா வுக்கு அனுப்பிய கோரிக்கையில் முன் வைத்துள்ளன.

# தீவகத்தில் கால்பதிக்கும் சீனா



நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய பகுதிகளில் புதுப்பிக்கதக்க எரிசக்தி வழங்கல் அமைப்பை உருவாக்குதவற்கு சீனா நிறுவனமொன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் சிறிலங்கா மின்சார சபை மேற்கொள்ள இருக்கும் இந்த செயற்திட்டதுக்காக சீனாவின் சைனோசோர் எச்வின் நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் மேலும் 1500 தமிழர் காணிகள் சுவீகரிப்பு

தென்தமிழீழத்தின் மட்டக்களப்பு பகுதியில் மயிலந்தமடு மேய்சல்தரை தமிழர் காணிகள் விவகாரம் தணிவதற்குள் மேலும் 1500 காணித்துண்டுகள் சிறிலங்கா ஊர்காவல் படையினரின் தேவைகளுக்கான சுவீகரிக்கப்பட்டுள்ளது.

கெவிழியாமடு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட காத்தமல்லி தோட்டம், வெட்டிப்போட்டசேனை போன்ற பல பகுதிகள் நீண்டகாலமாக பரம்பரை பரம்பரையாக கால்நடை வளர்ப்புக்காக பயன்படுத்தப்படும் மேய்ச்சல் தரையாக இருந்து வருவதுடன், படுவான்கரை பகுதியில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்போது, இங்குள்ள கால்நடைகள் இப்பகுதிகளுக்கு மேய்ச்சலுக்காக கொண்டுசெல்லப்பட்டு வருவது வழமை.

இந்நிலையில் 1500 காணித்துண்டுகளை



சுவீகரித்த சிறிலங்கா அரச அதிகாரிகள், ஊர்காவல் படையினரின் முந்திரிகை வளர்ப்புக்காக முள்கம்பி வேலிகளை இட்டுள்ளனர்.

## செய்திகள்

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிப்புக்கு பன்னாட்டு செயற்பாட்டாளர்கள் கண்டனம் !








யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த நினைவிடத்தைத் தகர்த்தமைக்கு எதிரான போராட்டங்களில் முஸ்லிம் மக்களும், மலையக மக்களும், தென்னிலங்கை ஆதரவுச் சக்திகளும் பரவலாக இணைந்து கொண்டமை ஒடுக்கப்படும் மக்களின் உணர்வுத் தோழமை வலுப்படுவதைக் காட்டுகிறது.

இத்தகைய உணர்வுத்தோழமையின் வலுவும் தொடர்ச்சியும் வீச்சும்தான், ஒடுக்கப்படும் அனைத்து மக்களுக்கான நம்பிக்கையாக அமைவதுடன், ஒடுக்குதலை எதிர்கொள்வதற்கான பலமாகவும் அமையும் என்பதை உறுதியாக நம்புகிறோம் என பன்னாட்டு செயற்பாட்டாளர்களின் கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுப்தூபி அழிப்புக்கு எதிராக பன்னாட்டு எழுத்தாளர்கள், கலைஞர்கள் கல்வியலாளர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள் கூட்டு கண்டன அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளனர்.

நினைவிடங்களை இடிப்பதும், ஒடுக்கப்படும் மக்களின் வரலாற்றையும் மரபையும் சுவடுகளையும் அடையாளங்களையும் அழிப்பதும் கொடுங்கோன்மை அரசுகளதும் வெற்றியில் திளைப்போரதும் வழமை. எனினும், இப்போதுள்ள மூர்க்கமான இலங்கை அரசு மிகவும் திட்டமிட்ட வகையில் தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கு எதிராக வெளிப்படையாக இதனை நடைமுறைப்படுத்தி வருகிறது. இது முழு இலங்கையும் சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமே உரித்தானது என்பதைப் போலியாக நிறுவ முயலும் ஒரு பாரியதொல்லியல், பண்பாட்டு, மரபுரிமைத்திட்டத்தின் ஒரு அங்கமாகும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கனடா, பிறம்ரனில் முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் !

இலங்கைத்தீவில் இனப்படுகொலைக்கு உள்ளான தமிழ் மக்களை நினைவேந்தி அமைப்பதற்கு கனடா, பிறம்ரன் நகரசபையின் 3, 4ம் வட்டார உறுப்பினர் Martin Madeiros அவர்களினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.


யாழ். பல்கலைக்கழக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டதும் இந்தத் தீர்மானத்துக்கான காரணங்களுள் ஒன்று என்று நகரசபை உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இத்தீர்மானத்தினை தொடர்ந்து கருத்து பிரம்டன் நகரபிதா பற்றிக் பிரவுண், இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டவேளை 75000 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி அழிக்கப்பட்டமை சிறிலங்கா அரசாங்கத்தின் கலாச்சார இனப்படுகொலையின் ஒரு தொடர்ச்சி என தெரிவித்துள்ள அவர், எவரும் உயிரிழக்கவில்லை என காண்பிப்பதற்கும் வரலாற்றை மாற்றி எழுதுவதற்கும் சிறிலங்கா அரசாங்கம் முயல்கின்றது.

சிறிலங்கா அரசாங்கம் தனது இரத்தக்கரை படிந்த வரலாற்றை வெள்ளையடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அதேவேளை நாங்கள் கனடாவில் அதற்கு எதிர்மாறானதை செய்வோம். நாங்கள் தமிழர் இனப்படுகொலையை மறக்கப்போவதில்லை பாதிக்கப்பட்டவர்களை நாங்கள் நினைவில் வைத்திருப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# சென்னை மெரீனா கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் !



இலங்கைத்தீவில் இறந்தவர்களை நினைவுகூர்வதற்கான வெளி தமிழ்மக்களுக்கு இல்லாத நிலையில், சென்னை மெரினா கடற்கரையிலோ அல்லது சென்னையின் வேறு பகுதியிலோ முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் ஒன்றினை தமிழ்நாட்டு அரசு நிறுவ வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத்தீவில் தமிழ்மக்களுக்கான அரசியல்வெளி இல்லாத நிலையில்தான் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கப்பட்டிருந்தது.

தற்போது நினைவு கூர்வதற்கான வெளியையும் தமிழ்மக்களுக்கு அங்கில்லாத நிலையில், அதற்கான வெளியினை இலங்கைத் தீவுக்கு வெளியே உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

உலகின் தலைநகரங்களில் முள்ளிவாய்க்கால் அடையாளச் சின்னங்களை உருவாக்கும் வகையில், அதற்கு முன்மாதிரியாக தமிழகத்தின் சென்னை மெரீனா கடற்கரையிலோ அல்லது சென்னையின் வேறு பகுதியிலோ முள்ளிவாய்க்கால் அடையாளச்சின்னத்தை தமிழ்நாட்டு அரசு உருவாக்க வேண்டும் என கோருகின்றோம். இதற்கு தமிழ்நாட்டின் கட்சிகள், அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் ஆதரவு வழங்க வேண்டுகிறோம்.

இதுமட்டுமல்லாது மே-18 முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு நாளினை உலகெங்கும் வாழும் தமிழர்களை அடையாளப்படுத்தும் விதமாக ‘உலகத்தமிழர் தேசிய துக்க நாளாக’ மே-18ஐ தமிழ்நாட்டு அரசு பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்நாடு

# சிறிலங்கா கடற்படையினரால் மீனவர்கள் படுகொலை !!





சிறிலங்கா கடற்படையின் ரோந்துப் படகு மூலம் இடித்து தமிழக மீனவர்களின் மீன்பிடி கப்பலொன்றினை மூழ்கடித்து படுகொலைக்கு உள்ளான நான்கு மீனவர்களுக்கு ராமேசுவரம், தங்கச்சிமடத்தில் மீனவர்கள் நீதி கோரி போராட்டத்தில் ஈடு பட்டுள்ளனர்.

சிறிலங்கா கடற்படையினரது இச்செயலுக்கு தனது கண்டனத்தினை பதிவு செய்துள்ள தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, உயிரிழந்த மீனவர்கள் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை, ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்குவதாக அறிவித்துள்ளார். "மீன்களின் ஓட்டத்துக்கு ஏற்பவும், காற்றின் வேகத் துக்கு ஏற்பவும் படகுகள் திசைமாறுவதால் தான் தற்செயலாக மீனவர்கள் எல்லை தாண்டிச் செல்கிறார்கள். அவ்வாறு எல்லை தாண்டும் பட்சத்தில் சிறிலங்கா அரசு, உடனடியாக இந்திய கடலோரப் படையினர் மற்றும் இந்திய அரசிடம் தெரிவிக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு அவர்களை சிறையில் அடைப்பது, படகுகளை பறிமுதல் செய்வது மீனவர்களை துன்புறுத்துவது என்பது ஒருபோதும் ஏற்க முடியாத விசயம்' என தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறிலங்கா கடற் படையினரின் இச்செயலுக்கு தமது வன்மையான கண்டனத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

"இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டும் தமிழ்நாட்டு மீனவர்களை எல்லையிலேயே தடுக்குமாறும், ஊடுருவும் மீன வர களைச் சட்டத்தின் முன் நிறுத்து மாறும் நாம் தொடர்ந்தும்கோரும் அதேநேரம் வாழ்வியலைநாடும் அப்பாவி மீனவர்களின் உயிர்பறிக்கும் செயலை ஏற்கமாட்டோம் என்பதையும் தெரி வித்துக்கொள்கின்றோம். உறவு களை இழந்து தவிக்கும் தாய்த் தமிழகச் சொந்தங்களுக்கும் எமது மீனவரின் குடும்பத்தினருக்கும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்" என அவர் தெரிவித்துள்ளார்.

## முகங்களை மறைத்தவாறு மிரட்டிய இந்திய மீனவர்கள் ?

வட தமிழீழத்தின் வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறித் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள், பருத்தித்துறை மீனவர் ஒரு-வரின் வலைகளை அறுத்து அட்டூழியத்தில் ஈடுபட்டனர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுப்பர்மடம் இறங்கு துறையிலிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவில் 4 படகு களில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் தொழிலில் பருத்தித்துறை மீனவரின் 20 வலை களை அறுத்து எடுத்திருந்தனர். வலைகளைத் தருமாறு குறித்த மீன வர் கேட்டதற்கு இந்திய மீனவர்கள் கற்கள் பருத்தித்துறை மீனவரின் படகை நோக்கி எறியப்பட்டதோடு, தமக்கு அருகே வந்தால் தாக்குதல் நடத்துவோம் என்று இந்திய மீனவர்கள் மிரட்டியிருந்தனர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குறித்த இந்திய மீனவர்கள் தமது முகங்களை துணிகளால் மறைத்து கட்டியிருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த அத்துமீறலினால் சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான வலைகளை குறித்த மீனவர் இழந்துள்ளார் என பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர் சங்கத்தலைவர் தே.தேவதாசன் தெரிவித்துள்ளார்.



# விடுதலைக்காக காத்திருக்கும் தமிழகம்

பேரறிவாளன் விடுதலை குறித்து முடிவெடுக்க ஆளுநருக்கு ஒரு வாரம் அவகாசம் அளித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குழப்பமான உச்ச நீதிமன்ற உத்தரவு நகலால் பேர-றிவாளன் தரப்பு இன்று மீண்டும், முறையிட்டதையடுத்து அவ-காசம் தரப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி, பேரறிவாளன், சாந்தன், முருகன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் உள்ளிட்ட ஏழு பேர் தற்போது ஆயுள் தண்டனைக் கைதிகளாக சிறையில் உள்ளனர்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கடந்த 30 ஆண்டுகளாக சிறையில் உள்ள ஏழு பேரை விடுதலை செய்ய உத்தரவிட வேண்டுமென தீர்மானமொன்று தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருந்த. இந்த தீர்மானம் மீது மூன்று ஆண்டுகளாக ஆளுநர் எந்த முடிவும் எடுக்காத நிலையில், உச்சநீதிமன்றம் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி பேரறிவாளன் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த நிலையில் பேரறிவாளன் தொடர்ந்த வழக்கின் இறுதிகட்ட நீதிமன்ற விசாரணையின் போது பேரறிவாளன் விடுதலை குறித்து ஆளுநர் 3 முதல் 4 நாட்களில் முடிவெடுப்பார் என்று மத்திய அரசு சார்பில் சொல்லப்பட்டது. உச்ச நீதிமன்றத்தில் வழக்காடிய மத்திய அரசு வழக்கறிஞர் துஷார் மேத்தா, பேரறிவாளன் விடு தலை விவகாரத்தில் குடியரசுத் தலைவருக்குப் பதிலாக ஆளுநரே முடிவெடுப்பார் என்று தெரிணவித்ததோடு, 3 அல்லது 4 நாள்களுக்குள் ஆளுநர் முடிவெடுப்பார் என்றும் தெரிவித் திருந்தார்.

இந்த நிலையில் பேரறிவாளன் விடுதலை தொடர்பாக முடிவெடுக்க தமிழக ஆளுநருக்கு ஒரு வார கால அவகாசம் வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில் விடுதலைக்காக தமிழகம் காத்திருக்கின்றது.



# இறையாண்மைக்கான போராட்ட களம் தாய்லாந்து




**மக்கள் தமது அரசியல் பெருவிருப்பினை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு சிறிலங்காவின் ஆறாம் திருத்தச்சட்டம் எவ்வாறு கருத்துரிமையினை, பேச்சுரிமையினை பறிக்கின்றதோ,**

அதுபோலவே தாய்லாந்தில் முடியாட்சிக்கு எதிராக கருத்து தெரிவிப்பதும், போராடுவதும் நீண்ட கால சிறை அல்லது அதை விட கடுமையான தண்டனைக்கு வகை செய்யும் குற்றமாக கருதப்பட்ட வருகின்றது.



ஆனால்கடந்தபலமாதங்களாக தாய்லாந்தில் நடைபெற்று வரும் மக்கள் போராட்டம் என்பது முடியாட்சிக்கு எதிரானதாக மட்டுமல்லாது, அதன் மீது மக்கள் நம்பிக்கையினை இழந்து வருகின்றனர் என்பதனையும் வெளிக்காட்டிவருகின்றது. அதாவது மக்கள் தமக்கான இறையாண்மை, தம்மிடமே இருக்க வேண்டுமென போராடி வருகின்றனர்.

இறையாண்மை என்பது மக்களுக்குரியது. மக்களிடம் இருந்தே ஓர் தேசத்துக்குரிய இறையாண்மை மேலெழுகின்றது. ஆனால் இன்றைய உலக அரசுகள் "மக்கள் இறையாண்மையை" நீக்கம் செய்து, தாங்களே தேசத்தின் இறையாண்மையை தீர்மானிக்கும் சக்திகள் என அடையாளப்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக இலங்கைத்தீவினை மையப்படுத்திய பாரிய மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பிலான விடயங்களில் "சிறிலங்காவின்" இறையாண்மைக்குள் நாம் தலையிடமாட்டோம்எனபலஉலகநாடுகள் கூறுவதனையும், சிறிலங்காவின் இறையாண்மைக்குள் வெளியார் தலையிட முடியாது என சிங்கள ஆட்சியாளார்கள் சொல்வதனையும் அடிக்கடி கேட்டிருப்போம்.

அதாவது, தமிழர்களுடைய தேசத்தினை பெரும் இனஅழிப்பின் ஊடாக ஆக்கிரமிப்புச் செய்த "சிங்கள அரச இறையாண்மையே" உலகம் சொல்கின்ற இறையாண்றையன்றி, நீதிக்கும் அரசியல் உரிமைக்குமாக போராடுகின்ற ஈழத்தமிழ் "மக்களுடைய இறையாண்மை" அல்ல. இதுதான் உலக அரசுகள் இன்று போதிக்கின்ற இறையாண்மை.

சீனாவினால் பறிக்கப்படும் தமது இறையாண்மைக்காக கொங்கொங் மக்கள் சமீபத்திய காலங்களாக போராடி வருகின்றனரோ, அவ்வாறே தாய்லாந்து மக்களும் முடியாட்சி ஊடாக தாம் இழந்த இறையாண்மைக்காக மக்கள் போராடத் தொடங்கியுள்ளனர்.

கடந்த தேர்தலில் சர்சைக்குரியவகையில் வெற்றி பெற்ற முன்னாள் இராணுவத் தலைவரான பிரயுத் சான்-ஓச்சா பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்பது மட்டுமல்லாது தாய்லாந்தின் முடியாட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமெனவும் போராட்டத்தின் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. புதிய அரசியலமைப்பிற்கும் போராட்டகாரர்கள் அழைப்பு விடுக்கின்றனர்.

குறிப்பாக மாணவர் சமூகத்தினால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டம் இன்று மக்கள் போராட்டமாக அனைத்து தரப்பினரும் பங்கெடுக்கும் போராட்டமாக மாறியுள்ளது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று ஒருபுறமிருக்க, மறுபுறம் வீச்சடையும் போராட்டத்தினை கட்டுப்படுத்துவதற்கு தாய்லாந்து அரசு, கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. குறிப்பாக சமூகவலைத்தளங்கள் ஊடாக போராட்டகாரர்கள் அணிதிரளுகின்றனர் என்ற வகையில் "டெலிகிராம்" செயலியை அரசு முடக்கியுள்ளது. முக்கிய நகரங்களில் நான்கு பேருக்கு மேல் ஒன்றுகூடவும் தடை விதித்துள்ளது. 12 மாணவத் தலைவர்கள் மீது கைது ஆணையினை காவல்துறை பிறப்பித்துள்ளதோடு, பலரையும் கைது சிறைகளில் அடைத்துள்ளது.

ஆனாலும் போராட்டம் ஓய்ந்து விடவில்லை.

"தாய்லாந்தில், சிறிய அளவிலான மக்கள் மட்டுமே பெரும் சக்திகொண்டவர்களாக இருக்கிறார்கள். பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே பெரிய இடைவெளி இருக்கிறது. இதற்கெல்லாம் முடியாட்சிதான் காரணம்" என்ற கருத்து மக்கள் மனதில் நீண்டகாலமாகவே இருக்கிறது. குறிப்பாக கொரோனா வைரஸ் தொற்றுநோயின் சமூக தாக்கத்தால் தாய்லாந்தின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களிடையே அதிருப்தி அதிகரித்துள்ளது. பரவலான பணிநீக்க நடவடிக்கைகள், போதுமான நிதியுதவி இல்லாமை மற்றும் முதியோருக்கான தாமதமான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் போன்ற அனைத்தும் நாட்டின் எப்போதும் விரிவடைந்துவரும் சமூக சமத்துவமின்மை ஆகிய சமூக-பொருளாதார நெருக்கடியும், இந்த போராட்டத்தை கூர்மையடைய வைத்துள்ளது.





இராணுவ ஆதிக்கத்தினை கொண்ட தாய்லாந்தின் ஆட்சியாளர்கள் இரும்புக்கரங்கொண்டு போராட்டத்தினை அடக்க முனைகின்றனர். அவசர நிலைப் பிரகடனத்தை செய்து போராட்டகாரர்களை கைது செய்துகின்றனர்.

உலகின் மிக நீண்டகாலம் முடியாட்சியைக் கொண்ட நாடாக தாய்லாந்து இருந்துவருவதோடு, இராணுவப்புரட்சிகள் ஊடாக ஆட்சிகத்திரைக்கு வருகின்றவர்கள், முடியாட்சியின் சேவர்களாகவே இருந்து வருகின்றனர்.

"முடியாட்சியினை" நாட்டின் புனிதமாக காத்துக் கொள்ளும் வகையில், அரசருக்கோ அரச குடும்பத்தினருக்கோ எதிரான கருத்துக்களோ செயற்பாடுகளோ மிகவும் மோசமான தண்டனைக்குரிய குற்றமாகவே தாய்லாந்து சட்டம் உள்ளது. ஆனால் சமூக வலைத்தளங்கள் ஊடாக சமீபத்திய ஆண்டுகளில் வளர்ந்து வரும் மக்கள் அரசியலுக்கான "அரசியல் வெளி", கட்டமைக்கப்பட்ட முடியாட்சி புனிதன்மைக்கு எதிராக திரட்சி கொண்டு வருகின்றனது. இதனை பல நாடுகளிலும் நாம் காணக்கூடியதாகவுள்ளது.




மக்கள் அரசியல் வெளி என்பது அது மக்களுக்கான இறைமையாகும். எவ்வாறு தாய்லாந்து மக்கள் தமது இறைமைக்காக போராடுகின்றார்களோ, எவ்வாறு கொங்கொங் மக்கள் தமது இறைமைக்காக போராடுகின்றார்களோ அவ்வாறானதொரு மக்கள் போராட்டமே தமிழர் தேசத்தின் இறையாண்மையினை மீட்டெடுக்கும்.

– அகரதன்

# மாவீரர் நாளுக்கு சிறிலங்கா அரசு தடை விதித்த போதிலும், தமிழர்கள் எதிர்த்து நின்று போராடுவது ஓயவில்லை.



சிறிலங்காவில் ஆங்கில இணையத்தளம் ஒன்றை நடத்தி வந்தது மட்டுமின்றி,கொழும்புவில் இருந்து வெளிவரும் 'சண்டே டைம்ஸ்' பத்திரிக் கையிலும் கட்டுரைகள் எழுதிவந்தவர்.

தமிழர் வாழும் பகுதிகளில் அவர்களுக்குத் தேவை யான அத்தியாவசியப் பொருட்களை வழங்காமல், தமிழர்களுக்கு எதிரான போரில் உணவுப் பொருள் வழங்கலையே ஒரு ஆயுதமாக சிறிலங்கா அரசு பயன்படுத்துகிறது என்று தனது கட்டுரை ஒன்றினை எழுதியமைக்காக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறிலங்க இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்.

கொழும்பு உயர் நீதிமன்றத்தினல் 20 ஆண்டுக் கால கடுங்காவல் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டு, 675 நாள் சிறைவாசத்துக்கு பின்னராக சர்வதேச அழுத்தங்கள் காரணமாக விடுவிக்கப்பட்டவர்.

தற்போது அமெரிக்காவில் புலம்பெயர்ந்து வாழும் இவர், பல சர்வதேச ஊடகங்களின் தென்னாசிய செய்தியாளராக இருப்பதோடு, தமிழர்கள் போராட்டம் தொடர்பிலான கட்டுரைகளை வரைந்து வருபவர். சமீபத்தில் **international policy digest** ஆங்கில ஊடகத்துக்கு மாவீரர் நாள் தொடர்பாக அவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.

– ஜே.எஸ்.திசநாயகம்



மாவீரர் நாள் அனுஸ்டிக்கத் தொடங்கி இந்த முப்பதாண்டு காலத்தில் எதற்கு அழுத்தந்தருவது என்பதில் ஒரு நுட்பமான மாற்றம் ஏற்பட்டுள்ளது. நாட்டின் உள்நாட்டுப் போரில் வீழ்ந்த தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கான நினைவு நாளாகத் தொடங்கிய மாவீர்ர் நாள் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டும் நினைவு நாளாகியுள்ளது.

எதற்கு முதன்மை என்பதில் மாற்றம் ஏற்பட்டிருப்பினும் அநீதியையும் ஒடுக்குமுறையையும் எதிர்த்து நிற்பதோடு மாவீரர் நாளுக்குள்ள வலுவான தொடர்பிழைகள் ஆண்டுக்கணக் கில் அறுபடாது தொடர்கின்றன. இன்றைய நிலையில் மாவீரர் நாள் என்பது நீடித்த அரசியல் தீர்வுக்குத் தேவையான அதிகாரப் பகிர்வுக்கும் பொறுப்புக் கூறலுக்கும் மாறாக சிறிலங்கா அரசு முன்னிறுத்தும் போலித்தனமான நல்லிணக்க செயல்வழியை எதிர்த்து நிற்பதன் அடையாளமாகியுள்ளது.

சிங்களம் பேசும் பெரும்பான்மையின் கட்டுப்பாட்டிலிருக்கும் அரசு கடைப்பிடித்த அமைப்புசார் பாகுபாட்டையும் இனவெறியையும் மனிதவுரிமை மீறல்களையும் தமிழர்கள் எதிர்த்து நின்றதிலிருந்து சிறிலங்காவின் அரசியல் பிணக்கு தொடங்கிற்று.

சிங்கள மேலாதிக்கத்தை எதிர்த்து இராணுவ வழியில் புதிய அரசு ஒன்றை அமைப்பதற்கான போராட்டம் முள்ளிவாய்காலுடன் முடிந்து விட்ட நிலையில் அரசியல் வகையிலும் சமூக வகையிலும் நல்லிணக்கம் தொடங்கிற்று. இதன் பொருள் ஒவ்வொருவரும் இந்தக் குறிக்கோளை ஆதரித்தார் என்பதன்று. ஆனால் நடைமுறையளவில், குறுங்கால நோக்கில், இதுவே இலக்காயிற்று.

நல்லிணக்க உத்தி அடிப்படையில் இரு வழிகளினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒன்று, எத்தனையோ முறை நிராகரிகப்பட்டிருப்பினும் தமிழர்கள் சிறிலங்காவின் இரண்டாந்தரக் குடிமக்களே என்றாலும் உண்மையுள்ள குடிமக்கள் என்பதை வலியுறுத்துதல் இரண்டு, சரிநிகரானவர்களாகக் கருதி நடத்தப்பட்டால் மட்டுமே தமிழர்கள் நல்லிணக்கம் உண்மையானது. இதற்குப் பொறுப்புக்கூறலும் அதிகாரப் பகிர்வுமான வழி யில் நீதி வேண்டும் என்பதை நிலைநிறுத்தல்.

நல்லிணக்கத்துக்கான இந்த இரண்டாம் வழியில்தான் மாவீரர் நாளுக்கு ஒரு வகிபாகம் இருந்தது. உள்நாட்டுப் போர் முடிந்தவுடனான ஆண்டுகளில் அதிபர் மகிந்த இராசபட்சே பொறுப்புக்கூறலுக்கு எதிராக ஒரு கடும்போக்கை மேற்கொண்டார். அவரது அரசு போர்க்குற்றங்கள் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பெற்ற இராணுவத்தினர் மீது வழக்குத் தொடுக்க மறுத்து விட்டது. தமிழர்களை இலக்காகக் கொண்டு காணாமலாக்குதல், சித்திரவதை, நிலப்பறிப்பு, இராணுவமயம் ஆகியவற்றுக்கு அவர் அதிகார மளித்தார். இரண்டாவதாக, நடாளுமன்றத்தில் ஆகப் பெரிய தமிழ்க் கட்சியாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் நேருக்கு நேர் பேச்சு நடத்த முன்மொழிந்த போது இராசபட்சே அதனை மறுதலித்து விட்டார். மாறாக, நாடாளுமன்றப்பொறுக்குக் குழு அமைப்பதை ஆதரிப்பதாகச் சொன்னார், இந்தக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பல அரசியல் கட்சிகளில் ஒரு கட்சியாக இடம்பெறும், தமிழ் மக்கள்சார்பிலான அதன் கோரிக் கைகள் சிங்களக் கட்சிகளின் பெருங்கூட்டத்தில் மூழ்கடிக்கப்படும். அதாவது அரசாங்கம் சத்தும் சாறமுமான நீதியில்லாமல் ஓர் அரசியல் தீர்வை முன்தள்ளப் பார்த்தது என்று பொருள்.

2011 நவம்பர் 27ம் நாள் யாழ் பல்கலைக் கழகத்தில் "அடையளந்தெரியாத ஆட்கள்" அரசை மீறி மாவீர்ர் நாள் கொண்டாடினார்கள். 2012ஆம் ஆண்டு இதுவே மீண்டும் நடபெற்ற போது அடக்குமுறை கடுமையாக இருந்தது, மாணவர்கள் தாக்குண்டனர், தளையுண்டனர்.

அரசதிகாரத்தை மதியாத இச்செயல்கள் இராசபட்சே அரசுக்கும் அது செய்த கொடுமைகளுக்கும் தமிழர் எதிர்ப்பின் அடையாளங்களாக அமைந்ததோடு, நீதிக்கான போராட்டத்தின் முந்தைய கட்டத்தை மீண்டும் நினைவுபடுத்தவும் செய்தன. அதுமுதல் மாவீர்ர் நாள் என்பது அரசையும் நீதியில்லாத நல்லிணக்கத்துக்கான அதன் திட்டத்தையும் எதிர்த்து நிற்பதன் அடையாளமாயிற்று. இந்தத் திட்டம் பத்தாண்டு காலமாகத் தொடர்வதோடு, மகிந்த இராசபட்சே, மைத்ரிபால சிறிசேனா, கோட்டாபய இராசபட்சே ஆகிய மூன்று அதிபர் பதவிக் காலங்களைக் கடந்து வந்துள்ளது.


இந்தப் பத்தாண்டு காலமும் ஆட்சியாளர்கள் பொறுப் புக் கூறலுக்கு அதிகாரப் பற்கள் இல்லாத நிறுவனங்களையே முன்மொழிந்துள்ளார்கள். படிப்பினைகள் மற்றும் மீளிணக்க ஆணையம் "நம்பகமான பொறுப்புக் கூறல் பொறிமுறை அல்ல" என்று பன்னாட்டுப் பொதுமன்னிப்புக் கழகம் கூறிற்று. காணாமலாக்குதலுக்கு மாமருந்தாக 2018ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட காணாமற்போனோர் அலுவலகத்தையும், சரி, அதே போல் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தையும் சரி, தமிழர்கள் அடியோடு நிரகரித்து விட்டனர். மாறாக, போர்க்காலக் குற்றங்கள் குறித்தும் காணாமலாக்கிய நிகழ்வுகள் குறித்தும் பன்னாட்டுப் புலனாய்வு, படைவிலக்கு, மிகக் குறைந்தபட்சமாக கூட்டாட்சியரசுக்குள் அதிகாரப் பகிர்வு ஆகியவற்றின் ஊடாக நீதி யும் பொறுப்புக்கூறலும் என்பது தமிழர்களின் கோரிக்கை.

கோட்டபய இராசபட்சே அரசாங்கம் இந்தக்கோரிக்கைகளை மறுதலிக்குமுகத்தான் ஐநா மனிதவுரிமைப் பேரவையின் 30-1 தீர்மானத்திலிருந்து விலகிக் கொண்டது.

நல்லிணக்கத்துக்கான நிலைமாற்ற நீதி வழிவகைகளை எடுத்துரைத்த தீர்மானம் இது. மேலும் கோட்டாபய அரசாங்கம் தமிழ்ப் பொதுமக்களைக் கொலை செய்தமைக்காகத் தண்டிக்கப்பட்ட படையாள் ஒருவரை மன்னித்து விட்டது, காணாமற்போனவர்கள் உயிருடனில்லை என்று அறிவித்தது, மேற்கொண்டு அதிகாரம் பகிர்தலை நிறுத்த விரும்புகிறது.

தமிழர்களின் நீதிக் கோரிக் கைகளும் கொழும்புவின் மறுதலிப்பும் வளர்ந்து சென்று கொண்டிருந்த நிலையில் ஆட்சியாளர்கள் 2020ஆம் ஆண்டும் மாவீரர் நாள் மீது அடக்குமுறை செய்வது தவிர்க்கவியலாததாயிற்று.

பொது நினைவேந்தலை அரசாங்கம் தடை செய்ததோடு, தனிப்பட்ட முறையிலான சடங்குகளும் சீர்குலைக்கப்பட்டன. சமூக ஊடகங்களில் பதிவிட்டவர்கள் தளைப்படுத்தப்பட்டனர். கூட்டு நினைவேந்தலுக்கான அரசுத் தடை வெற்றி பெற்றதாகச் சிலர் போற்றியிருப்பினும், அது அப்படியன்று. பொது நினைவேந்தலைத் தடை செய்வதில் கொழும்பு வெற்றி கண்டாலும் பலரும் தனிப்பட்ட முறையில் பரவலாக எதிர்ப்புக் காட்டிய அந்தத் தீச்சுடரை அதனால் அணைத்து விட இயலவில்லை. பெருந்திரள் சட்டமறுப்பைக் காட்டிலும் தனிமனிதச்சட்டமறுப்புகளுக்கு வழக்கமாகக் கூடுதலான துணிவு தேவைப்படும். ஏராளமான தனிமனிதர்கள் தடையை மீறிய செயல் கொழும்பின் ஆணைக்கு எதிர்ப்பு வளர்ந்து வருவதையே காட்டுகிறது. ஆட்சியாளர்களும் அவர்தம் குடியியல் சமூகக் கூட்டாளிகளும் நீதியில்லாத மீளிணக்கப் பாதையைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கும் வரை மாவீரர் நாளைத் தடை செய்யும் சட்டங்களைத் தமிழர்கள் மீறும் நிலை தொடரவே செய்யும்.



INTERNATIONAL POLICY DIGEST

WORLD POLITICS U.S. NEWS ENTERTAINMENT TECH SCIENCE HEALTH MEDIA CULTURE BOOKS BUSINESS

J.S. Tissainayagam

## Tamil Resistance Lives on Despite Sri Lanka's Ban on Maaveerar Naal

Over the three decades that it has been celebrated, Maaveerar Naal has undergone a subtle shift in emphasis. In what began as a remembrance day for fallen Liberation Tigers of Tamil Eelam (LTTE) rebels in the country's civil war, it has become a commemoration asserting the rights of Tamils.

ஈழமண்

நினைவோடை

# எங்கள் சுதர்சன் எங்கே ?



சிறந்த ஒரு மருத்துவ போராளியாகவும் போராளி நோயாளிகளின் அன்பிற்குரியனவனாக மட்டுமின்றி பின்னாளில் இளம் பல் வைத்தியனாக தமிழீழத்தின் பட்டிதொட்டி எங்கும் அறியப் பட்டவனாகி எம் மக்கள் எல்லோருக்கும் வேண்டியவனுமானான்.

உடுப்பிட்டி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி தம்பதிகளின் தவப்புதல்வனாய். 1975 ஆண்டு றூபன் என்ற இயற்பெயருடன் அந்த குடும்பத்தின் வரவாக-யியவன் குடும்ப பாசத்தை நெஞ்சினில் சுமந்து ஈழமண் காக்க 1995 ஆம் ஆண்டு விடுதலைப் போரிற்கு தன் தோள் கொடுக்கப்புறப்பட்டான்.

காலம் அவனை மருத்துவத்துறைக்கு அனுப்பியது. மருத்துவ போராளியாக இருந்த போதே பல் மருத்துவத்தைக் கற்று அதில் சிறப்பு பெற்று வளர்ந்தான் போராளிகளின் பயிற்சி முகாம் தொடங்கி விசேட பாசறைகள் வரை சுதர்சனின் நடமாடும் பல் வைத்திய சேவை விரிந்தது.அது மட்டுமின்றி நடமாடும் மருத்துவ சேவையூடாக ஊர் ஊராய் சென்று மக்களின் நலன்காத்த உத்தமபுத்திரன்.

2002ம் ஆண்டின் பின்னர் முற்று முழுதாக மக்களிற்காக மருத்துவ தேவையை பார்த்து கொண்டிருந்த தமிழீழ நிழலரசின் அங்கமான தமிழீழசுகாதார சேவையில் சுதர்சனின் கால்கள் பதித்த நாட்கள் போராட்ட வாழ்வில் அவன் இந்த மக்களிற்கு மருத்துவ சேவை செய்ய கிடைத்த சந்தர்ப்பத்தை முழுமையாக பயன்படுத்தினான். வடக்கு மட்டுமன்றி கிழக்கு மாகாணம் வரை அவன் கால்கள் பதிந்தன. தமிழீழ சுகாதார சேவையின் ஓயாத புயலானான். தியாகதீபம் தீலிபன் மருத்துவமனைகள் எல்லாம் சிறப்பு பல் வைத்தியனாக வலம் வந்தான்.

பாடசாலை மணவர்களும் சுதர்சனை மறந்து விடமாட்டார்கள். பற்சுகாதார அணியுடன் ஒவ்வொரு பாடசாலைக-ளாய் ஏறியிறங்கி வரமுன் காப்பதற்காய் பற்சுகாதாரம் பற்றி தெளிவூட்டல் கருத்தரங்குகளை மாணவர்கள் மட்டுமின்றி சாதாரண மக்கள் புரியும் படி செயற்படுத்துவதில் அவனுக்கு நிகர் அவனே. எப்பொழுதும் சோர்ந்து போகாத மனவுறுதி கொண்டவன் தன்னுடன் சேர்ந்து பணிபுரிவோர் களையும் உற்சாகமாகவே வைத்திருக்கும் பக்குவம் கொண்டவன். எப்போதும் மற்றவர்களின் திறமைகளை பார்த்து வாழ்த்துவதில் பின் நிற்கமாட்டான்.



ஒரு இடத்திற்கு போக வேண்டும் என்றால் வாகனவசதி கிடைக்காவிட்டாலும் ஏதோ வொரு வழியில் சென்று கடமை முடிப்பன். தூக்கம் பசி எல்லாமே அவன் கடமை கண்டு அஞ்சிப்போகும்.

ஒரு பொழுது அக்கரையான் மருத்துவ மனையில் வேலை முடித்து இரவு இரண்டு மண-யியளவில் கிளிநொச்சியில் உள்ள இராணுவ மருத்துவமனைக்கு வரும் வழியில் நித்திரை, பசி, களைப்பால் வந்த அசதியால் வீதியில் நிறுத்தி வைத்திருந்த உழவு இயந்திரப்பெட்டியுன் மோதி மூக்கில் காயத்துடன் இரத்தம் சிந்த வந்து சேர்ந்தான். அடுத்த நாள் நாகர்கோவில் பகுதியில் மருத்துவ மூகாம் ஒழுங்கு ஒன்று இருந்தது. "சுதர்சன் நீங்கள் வர வேண்டாம் தையல் போட்டிருக்கு பல்சிகிற்சையை நிறுத்திவிட்டு மற்றவைகளைப் பார்ப் போம் நீங்கள்ஓய்வுஎடுங்கள்" என்றுபொறுப்புவைத்தியர் கூற இல்லை என்று அடம்பிடித்து முதல் ஆளாய் பற்சிகிற்சைப் பொருட்களுடன் வாகனத்தில் ஏறிக்கொண்டது. இன்றும் அவன் பணிபற்றி நினைத்து பெருமை பட வைக்கிறது.

சில நாட்கள் முன் கிளிநொச்சி மாவட்ட வேரவில் கிராமத்தை சேர்ந்த 70 வயதான தாயொருவருடன் கதைத்தேன். எந்த தடுமாற்றமும் இன்றி தெளிவாக பெயர் சொல்லி "சுதர்சன் டொக்டர் இப்போ எங்கே" என கேட்டபோது பதில் சொல்ல முடியாமல் தவித்து நின்ற எனக்கு "அந்த பிள்ளை என்ர பல்லை எப்படி நோகாமல் கொள்ளாமல் வடிவா கதைச்சு கதைச்சு பிடுங்கிவிட்டவர் " வெத்திலை போடக்கூடாது புகையிலையும் போட வேண்டாம் என்று ஒவ்வொரு முறையும் வரும் போது சொல்லி சொல்லி நிறுத்தவைத்திட்டார் தங்கமான பிள்ளை அது தான் என்ர வருத்தம் எல்லாம் குறஞ்சு உயிருடன் இருக்கிறன் இந்த வயது வரை அதை நான் மறக்கமாட்டேன்" என்றார்.

இவரைப் போல் இன்னும் எத்தனை அம்மாக்கள் உன்னை தேடிக்கொண்டிருப்பார்கள்சுதர்சன்.

இவன் இந்த நாட்டிற்கும் எம் மக்களிற்கும் செய்த சேவைகளை மறந்து போகமாட்டார்கள். ஊர் உறங்கி போனாலும் உன் நினனவுகள் உற்றெடுத்துக் கொண்டேயிருக்கும் எம் மண்ணிலிருந்து.

இவனது சேவையின் சாட்சியாய் இவரைப் போல் இன்னும் பலரும் உயிருடன் உள்ளனர் நீ மட்டும் இன்றில்லை

மருத்துவபொருட்களிற்குதடைபோட்ட நாட்களில் கிடைத்த தொழில் நுட்பத்தில் Diagnostic Radiology (X _ray) பரிசோதனைகள் செய்வதில் அன்று நீ தான் எங்கள் போராளி நோயாளிகளின் கதாநாயகன் " சுதர்சன் அண்ணா எப்ப எக்ஸ்ரே எடுக்கிறது என்று மருத்துவமனையில் உள்ள என்பு முறிவு நோயாளர்கள் உன்னையே சுற்றுவார்கள். அதற்கான மருத்துவ பொருட்கள் வரும்வரை அவர்களை சமாளிக்க நீ படும்பாடு ஏன் எம்மை கேட்டாலும் நாம் தப்பிவிட உன்னை தானே காட்டுவோம். உனக்கு உதவியாக எந்த போராளி வந்தாலும் உனக்கு தெரிந்தவற்றை அவர்களிற்கு சொல்லிக்கொடுத்து அவர்களை அத்துறையில் வளர்ப்பதில் உனக்கு நிகரில்லை மருத்துவ பிரிவில் மட்டுமின்றி படையணி போராளிகள் பொறுப்பாளர்கள் தளபதிகள் என்று நட்பு பாராட்டிய தோழன் நீ !

"எல்லோரதும் செல்லப்பிள்ளையாக இருந்த நீ, இன்று எல்லோரையும் தேடலில் தவிக்க விட்டுச் சென்றாயே.யாருக்கு என்ன உதவி தேவையென்றாலும் முதலாவது ஆளாக வந்து நிற்பாயே! அன்றொருநாள் எனக்கு உடனே இரத்தம் ஏற்ற வேண்டியிருந்த போது முதலாவது ஆளாக நீதானே தந்தாய் சுதர்சன்.உன் நினைவுகள் என்றென்றும் எம்முடன் வாழும். "இவ்வாறு அண்மையில் பெண் போராளி இவன் நினைவை பகிர்ந்து கொண்டார்.

இவன் தன் தேசத்தை மட்டும் நேசிக்கவில்லை நண்பர்களையும் அதிகமாக நேசித்தான் அவர்கள் எதைக்கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் செய்து முடிப்பது இவனுக்கு தனிச்சிறப்பு சில வேளைகளில் நண்பர்களிற்காக நீயே தண்டனையையும் பெற்றிருக்கின்றான். அவ்வளவு பரந்த மனம் மற்றவர்களின் மகிழ்வில் இவன் முகம் மலரும். இவனுக்கு நண்பர்கள் பல செல்லப்பெயர்களை வைத்து அழைத்த போதும் நீ கடிந்து கொண்டதாய் நான் அறியவில்லை.

சுதர்சன் உந்துருளியில் பயணிக்கும் போது வீதியால் எந்த தாய் நடந்து வந்தாலும் அவர்களை ஏற்றி உன் பயணமுடிவுவரை அழைத்து போவாய் இறுதி நாளில் நீ எங்கே போனாய் என்று அறியாதவர்களாய் தேடுகின்றோம் இன்றுவரை

எப்படி மறப்பது நடமாடும் வைத்திய சேவையின் தமிழீழ சிறப்பு பல் மருத்துவர் சுதர்சன் ஒன்றாக இருந்த நாட்களை இறுதியாக வட்டுவாகலில் மே 17ம் தி-கதி வைத்து விசாரனைக்காக சிறிலங்கா இராணுவ புலனாய்வு துறையினர் கூட்டி சென்று குந்தவைத்திருந்ததாக உன் நண்பன் கூறினான். இன்று வரை எங்கே என்று தேடுகின்றோம்.

சுதர்ஷன் பற்றிய நினைவுகள் நெஞ்சக்கூட்டை பலமாய் அழுத்துகின்றது நிஜமாக அவனுடன் பேசமுடியவில்லை எம் நிழலாக நீ விட்டுச்சென்ற கனதிகளுடன் பேசுகின்றோம்

- மிதயா கானவி

ஈழமணி



# மேற்கிந்தியத் தீவுகளில் பொங்கல் பெருநாள் !




**பிரான்சின் ஆளுகைக்கு உட்பட்ட மேற்கிந்திய தீவுகளில் பொங்கல் பெருநாள் சமீபத்திய ஆண்டுகளில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னர் கரும்புத் தோட்டங்களுக்கு கூலிகளாக கொண்டு செல்லப்பட்ட தமிழர்களே இத்தீவில் வாழ்ந்து வருகின்றனர்.**

**இவர்கள் தமிழர்கள் என்ற அடையாளத்தை வெறும் மூலப் பெயர்கள் (பொன்னுச்சாமி - இராமசாமி) என மூலம் தாங்கியிந்தாலும், தமிழ் மொழி பேச்சு-எழுத்து வழக்கு என்பது இல்லாமல் போய்விட்டது. இந்து மதச்சடங்குகள் மட்டும் இவர்களை ஒன்றிணைத்து வைத்திருந்த நிலையில், தற்போது இவர்கள் தங்கள் பண்பாட்டு வேர்களை தேடத் தொடங்கிவிட்டனர்.**

**பண்பாட்டு அடையாளமாக ஒரு பண்டிகையாக இவர்கள் தைப்பொங்கலை இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு பின்னர் கொண்டாடத் தொடங்கியுள்ளனர். பறை முழக்கத்துடன் தமது பொங்கல் பண்டிகையை முன்னெடுக்கும் மேற்கிந்திய தமிழர்களின் பற்றி குறிப்ப்பினை தருகின்றார் சாம் விஜய் அவர்கள்.**



மேற்கிந்தியத்தீவுகள் என்றாலே கிறிக்கெற் ஞாபகத்துக்கு வரும். அந்த விளையாட்டு ஆடும் கருப்பர்கள் (ஆப்ரிக்கர்கள்) இனத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள்தான் கூடவே நினைவுக்கு வரும். ஆனால் மேற்கிந்தியத் தீவுகளில் ஒரு லட்சத்துக்கும் மேலான தமிழர்கள் சுமார் 175 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்கள் என்பது நம்முள் பலருக்குத் தெரியாது.

இன்றும் 20 000 கிலோமீட்டருக்கப்பால் உள்ள பிரான்சு நாட்டுக்குச் சொந்தமான மர்த்தினிக் மற்றும் குவாதலூப் போன்ற தீவுகளில் புதுச்சேரி, கரைக்கால் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து ஒப்பந்தக் கூலிகளாக கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யச் சென்றவர்களின் சந்ததியினர் பிரான்சியக் குடியுரிமையுடன் வாழ்கின்றனர். இவர்கள் தங்கள் வாழ்க்கைச் சூழ்நிலையில் தமிழை மறந்தாலும், தமிழ்ப் பண்பாட்டை மறக்கவில்லை என்பதை அங்கு சென்றுகள ஆராய்ச்சி செய்து இவர்களைப் பற்றி தமிழுலகத்துக்கு அறிவித்தவர் தமிழ்த்தூது தனிநாயக அடிகளார் அவர்கள்.

150 ஆண்டுகளுக்கு முன் இங்கு குடியேறிய முதல் இரண்டு தலைமுறையினர் தமிழ் பேசினர் என்றும் பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர் என்றும் தனிநாயக அடிகள் ஆவணங்களை ஆராய்ந்து கூறியுள்ளார். அவர் அங்கு சென்ற 1967ம் ஆண்டு தமிழ் பேசத்தெரிந்தவர்களில் 17 பேர்கள் சிறப்பாக பேசினார்கள் என்று 1968ல் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் அவர் வாசித்த, ஆராய்ச்சிக் கட்டுரையில் குறிப்பிடுகிறார். ஆனால் இன்று மேற்கிந்தியத் தீவுகளில் தமிழ் முற்றிலும் பேச்சுவழக்கின்றி அழிந்துவிட்டது.

ஓரிரு வர் தான் சிறிது பேசுகிறார்கள். அதுவும் குலதெய்வ வழிபாடுகளில் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள்.


அவர்களில் முக்கியமானவர் 86 அகவை நிரம்பும் மர்செல் சூலினா முத்துசாமி என்பவர். இவர் தான் அங்கு கடைசியாகத் தமிழ் பேசுபவர். அதுபோலவே நூற்றாண்டுகளுக்கு முன்பு கொண்டாடப்பட்ட பொங்கல் விழாவும் வழக்கொழிந்து போயிற்று. சென்ற சில ஆண்டுகளாக மீண்டும் பொங்கல் விழவைக் கொண்டாட முயற்ச்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

பிரான்சிய மேற்கிந்தியத் தீவுகளான மர்த்தினிக் மற்றும் குவாதலூப் போன்ற தீவுகளில் அடிமைகளாக கரும்புத்தோட்டங்களில் வேலை செய்த ஆப்ரிக்க இன மக்கள் 1848 ம் ஆண்டில் இயற்றப்பட்ட அடிமை ஒழிப்பு சட்டத்தினால் விடுதலை பெற்றபின், அடிமைகளாக வாழமாட்டோம் என்று கூறி, தோட்டங்களை விட்டு வெளியேறி, புது வேலை தேடி நகர்ப்புறங்களுக்குச் சென்று விட்டனர். ஆகையால் கரும்புத் தோட்டங்களில் தொழிலாளிகள் பற்றாக்குறை ஏற்பட்டு கரும்பு சம்மந்தப்பட்ட தொழில்களில் பொருளாதாரச் சீர்கேடுகள் உருவாயின. அவைகளைப் போக்கக்கூறி கரும்புத்தோட்ட வெள்ளைக்கார முதலாளிகள் பிரான்சு அரசிடம் வேறு புதிய தொழிலாளிகளை அழைத்துவருமாறு அழுத்தம் கொடுத்தனர். பிரான்சு நாட்டுக்குத் தென்னிந்தியாவில் காலனிகள் இருந்ததாலும், அங்குள்ளோர் கரும்பு போன்ற விவசாயத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தமையாலும், தமிழர்களை ஆசை வார்த்தைகள் கூறி ஒப்பந்தக் கூலிகளாகக் கப்பல்கள் மூலம் ஆயிரக் கணக்கில் பத்தாயிரம் மைல்களுக்கப்பால் உள்ள பிரான்சு காலனிகளான மர்த்தினிக் குவாதலூப்புத் தீவுகளுக்கு கொண்டு சென்றனர். இந்த 3 மாதக் கடற்பயணம் மிகவும் கொடியது. இப் பயணத்தின் போது பலர் கடல்நோய் வாய்ப்பட்டனர். கரைபோய் சேர்வதற்குள் ஆயிரக்கணக்கானோர் மாண்டனர். அதிகமாக நோயுற்றோர்கள் உயிருடன் கடலில் தூக்கி எறியப் பட்டனர்.. கடல் புயல்களால் பல கப்பல்கள் பயணிகளுடன் கடலில் மூழ்கின. கரை சேர்ந்தவர்களும் புதிய இடத்தில் பல துன்பங்களைச் சந்தித்தார்கள்.

1854ம் ஆண்டு மே மாதம் 6ம் தேதியன்று ஒரேலி (யுரசநடநை) என்ற இந்தியாவின் புதுச்சேரியிலிருந்து 317 தமிழர்களை ஏற்றி வந்தக் கப்பல் மர்த்தினிக் தீவின் முக்கியத் துறைமுகமான செயிண்ட் பியர் (ளுயவைெ "நைசசந) என்ற ஊரை வந்தடைந்தது. இதே கப்பல் அதே ஆண்டு திசம்பர் மாதம் 24 தேதியன்று 344 ஒப்பந்தக் கூலிகளுடன் குவாதலூப் என்ற தீவில் வந்தடைந்தது. இதில் கல்கத்தாவிலிருந்து வந்த சில கூலிகளும் அடங்குவர். இவ்வாறாக 1854 முதல் 1883 வரை குவாதலூப்பில் 42,326 பேர்களும், மர்த்தினிக்கில் 25,509 பேர்களும் இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலிகளாகக் குடியேறினர். வந்த இடத்தில் இவர்கள் பட்ட துயர்கள். எண்ணற்றவைகள். தமக்குப் பிடித்த தமிழ் உணவு வகைகள் கிடைக்கவில்லை. ஆப்ரிக்கர்களும், வெள்ளயர்களும் பேசும் கிரேயோல் மற்றும் பிரன்சிய மொழிப் புரியவில்லை. தமிழ் மதத்தை பின்பற்றக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன, தடுக்கப்பட்டன. கிருத்துவப் பிள்ளைகள் மட்டும்தான் பள்ளிகளில் சேர்க்கப் பட்டார்கள். தமிழ்மொழிக் கல்வி மறுக்கப்பட்டது.

தோட்ட முதலாளிகளின் கொடுமைகளாலும் ஆப்ரிக்கர்களின் பொறாமைக் குணத்தாலும் தமிழர்கள் மிகவும் துன்பப் பட்டனர். தமிழர்கள் தம் தாய்மொழியை இழந்தனர், பாரம்பரியத்தை இழந்தனர், பண்பாட்டையும் இழந்தனர். இவ்வளவு இழந்தும், குடியேறிய நாட்டின் வளத்தையே நோக்காகக் கொண்டு உழைத்து, பிரான்சியர்களின் நன்மதிப்பைப் பெற்று சில சலுகைகளையும் பெற்றனர். அவற்றில் முக்கிமான தமிழர் திருநாள் புத்தாண்டாகிய பொங்கல் திருநாளைக் அவர்கள் வாழ்ந்த கரும்புத் தோட்டக் குடியிருப்பிகளில் கொண்டாட அனுமதி கிடைத்தது. தமிழர்கள் பொங்கல் விழாவை கொண்டாட நான்கு நாட்கள் விடுமுறையும் அளிக்க பிரான்சு நாடு தொழிலாளர் சட்டம் இயற்றியது. இந்த சட்டம் பற்றி எல்லா கூலி ஒப்பந்தப் பத்திரங்களிலும் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்று வற்புருத்தியது. இணைத்துள்ள வேலை ஒப்பந்தப் பத்திரத்தைக் காண்க. இவ்வாறு தமிழர்கள் 1855 ம் ஆண்டு






கொண்டாடிய பொங்கல் திருநாள் கொண்டாட்டத்தை விரிவாக "மர்த்தினிக் மானிட்டர்" என்ற பிரான்சிய பத்திரிக்கையில் ஒரு வெள்ளைக்கார தோட்ட முதலாளி எழுதிய கட்டுரையை ஆராய்ந்து தனிநாயக அடிகள் ஆவணப் படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறு கொண்டாடபப்பட்ட பொங்கல் திருநாள் இரண்டு தலைமுறைக்குப் பிறகு கொண்டாடப் படவில்லை. அதாவது எறக்குறைய ஒரு நூற்றாண்டாக மர்த்தினிக் மற்றும் குவாதலூப்பு தீவிகளில் பொங்கல் கொண்டாடப்படவில்லை என்று தம் கட்டுரையில் கூறுகிறார்.

**(இந்தக் கட்டுரையின் ஆசிரியர், சாம் விஜய் அவர்கள் தமிழ்த்தூது தனிநயாகம் அடிகளின் அடிச்சுவட்டில் அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் சென்று, அவர் அராய்ச்சியின் தொடர்ச்சியை செய்துகொண்டிருக்கிறார். பொங்கல் விழாவை இத்தீவுகளில் மீண்டும் உயிர்ப்பிக்க அங்குள்ள ஆர்வலர்கள் மற்றும் அமைப்புகளின் ஊடாகவும் முயற்சி செய்து வருகிறார்)**

ஈழமலர்

## விருந்தினர் பக்கம்

# நம்மை ஏமாளியாக நினைக்கும் சிறிலங்கா

## இந்தியா எப்போது உணரும் ?



சட்டவாளரும், அரசியல் பிரமுகருமான [தமிழ்நாடு] கே.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் தினமணி நாளேட்டில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரின் சிறிலங்கா பயணம் தொடர்பாக எழுதிய கட்டுரையொன்றின் முக்கியமான பகுதி

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா இருவரும் கூட்டாக பத்திரிகையாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது, “ஒருங்கிணைந்த இலங்கைக்குள் தமிழ் சமுதாயத்தின் நீதி, சமத்துவம், அமைதி மற்றும் கௌரவத்திற்கு இந்திய அரசு துணை நிற்கும்” என்று இலங்கைப் பயணத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

இப்படித்தான் இந்திரா காந்தி மறைவுக்குப் பின் மத்திய அரசில் இருப்பவர்கள் தொடர்ந்து 35 ஆண்டுகளாக சொல்லிக் கொண்டே வருகிறார்கள், ஈழத் தமிழர் களுக்கோ 40 ஆண்டுகளாக எந்தத் தீர்வும் எட்டப்படாமல் இருக்கிறது.

இலங்கை இந்தியாவிற்கு எவ்வளவு தான் விரோதமாக நடந்துகொண்டாலும் இலங்கை ஆட்சியாளர்களுக்கு இந்தியா ஆதரவளிப்பது தொடர்ந்து நடந்து வருகிறது, அது மேலும் இந்தியாவிற்கு சிக்கல்களை உருவாக்கும் என்பதை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

ஜெய்சங்கர் உறுதியளித்தவாறு இலங்கைக்கு தடுப்பூசி தருவது ஒரு மனிதாபிமான செயல் தான், இருப்பினும் இந்தியாவின் பங்களிப்புகளையும் உதவிகளையும் பெற்று இலங்கையில் பலத்திட்டங்கள் நடை முறைப் படுத்தப்பட்டன.

இலங்கைக்கு பல வகைகளில் இந்தியா உதவிக்கரம் நீட்டியுள்ளது. இவற்றில் பலவற்றை நிறைவேற்ற முடியாமல் இலங்கை அரசு சண்டித்தனமும் செய்கிறது.

இலங்கை இந்தியாவிடம் தொடர்ந்து உதவிகள் பெற்றுக் கொண்டுவருகிறது. முள்ளிவாய்க்கால் போர் முடிந்தவுடன் இலங்கைத் தமிழர் புணர் வாழ்வுக்கு இந்தியா நிதி வழங்கியும் அது சரியாக அங்குள்ள தமிழர்களுக்கு சேரவில்லை.

சமீபத்தில் ஓராண்டுக்குள்ளே இந்தியாவிடமிருந்து இலங்கை இருமுறை நிதி உதவி பெற்றுள்ளது. ஆனால் இந்தியாவைக் காட்டி சீனாவிடமும் உதவிகளை பெறுகிறது. இந்தியாவிடம் ஒப்புக்கு உறவு வைத்துக்கொண்டு இலங்கை தன்னுடைய முழுமையான ஆதரவை சீனாவிற்கு கொடுப்பதை நாம் எப்போது சிந்திப்பது.

இந்த நிலையில் அங்குள்ள தமிழர்களை இந்தியா அரவணைத்தால்தான் இலங்கை இந்தியாவைக் கண்டு அச்சப்படலாம். இந்தியா மீது இலங்கைக்கு பயமில்லாமல் போனதற்கு காரணம் ஈழத் தமிழர்களுக்கு எவ்வளவு தான் பிரச்னை செய்தாலும், இந்தியா நம்மைக் கண்டிக்காது, ஒப்புக்கு அதிகாரம் வழங்கு என்று சொல்லும், அவ்வளவுதான் என எடுத்துக்கொள்ளும் மனபாங்கில் இலங்கை அரசு இருக்கின்றது.

இதை இந்திய அரசு உணர வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு இந்திரா காந்தி அணுகுமுறையின் படி நடவடிக்கை எடுத்தால் இலங்கை ஓரளவு தமிழர்கள் பிரச்னைகளுக்கு நியாயத்தை வழங்கும். இப்படித்தான் இந்திரா காந்தி அணுகுமுறையைப் பார்த்து அச்சம் கொண்டார் ஜெயவர்தனா.

இப்போது அங்குள்ள ஈழத் தமிழர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை இந்தியா உணர வேண்டும். அதிகாரப்பூர்வ மான பயணங்கள், பேச்சுவார்த்தை ஒருபக்கம் இருந்தாலும் கீழ்கண்டப் பிரச்னையில் இந்திய அரசு கவனம் செலுத்தவேண்டும்,

1. வடக்கு கிழக்கு மாகாணங்களில் 2009 முள்ளிவாய்க்கால் போர் முடிந்து 10 ஆண்டுகள் மேல் ஆகியும், சிங்கள ராணுவம் தமிழர்களுடைய நிலங்களை அபகரித்து முகாம்கள் அமைத்து அங்குத் தமிழர்களை மிரட்டக் கூடிய வகையில் இருப்பதை ராணுவத்தினர் உடனே திரும்ப வேண்டும்.

2. மேலே குறிப்பிட்ட ராணுவ முகாம்கள் அமைக்கப்பட்ட நிலங்கள், விவசாய காணி நிலங்கள், வீடுகளை திரும்பவும் தமிழர்களின் உரிமையாளரிடம் ஒப்படைக்கவேண்டும், இது குறித்தான வழக்குகள் நிலுவையில் உள்ளன.

3. முள்ளிவாய்க்கால் போரின்போது கைது செய்யப்பட்ட தமிழர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும்.

4. கடந்த 2009 போரின் போது காணாமல் போனவர்களை அறிந்து அதுகுறித் தான வெள்ளை அறிக்கையும், அவர்களைக் கண்டுபிடித்து அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கவேண்டும்.

5. ஈழத்தில் தமிழ் விதவைகள் மறுவாழ்வுக்கும் சரியான நடவடிக்கைகள் இல்லை.

6. இந்தியாவில் இருக்கும் ஈழ அகதிகள் குறித்தும் தெளிவானப் பார்வை சிங்கள அரசுக்கு இல்லை. இந்தியாவிலுள்ள அகதிகளை ஈழத்திற்கு திருப்பி அனுப்பி அந்நாட்டு மக்களாக வாழ செயல் திட்டங்களையும் இந்தியா இலங்கையிடம் பேசவேண்டும். சிரிமா சாஸ்திரி ஒப்பந்தம் போல ஈழத் தமிழ் அகதிகள் பிரச்னைகள் ஆகிவிடக் கூடாது.

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும் அகதிகளுக்கு இங்கு தங்கிய கட்டணத்தை ரத்து செய்து, எந்தவித பயணக் கட்டணமும் இன்றி அவர்களை கப்பலில் அனுப்பிவைக்க வேண்டும். இலங்கை சென்றபின் இந்த அகதிகளின் வாழ்வாதாரத்தையும் பெற அனைத்து நடவடிக்கைகளும் செய்ய வேண்டும்.

7. மாகாண கவுன்சிலை ஒழிப்பதற்காக சிங்கள அரசு இறங்கியுள்ளது, அது மேலும் சிக்கலை உருவாக்கும். மாகாண அரசுக்கு உரிய அதிகாரம் இந்தியா மாநிலங்களுக்கு வழங்கியது போல வழங்கப் பட்டால்தான் அங்குள்ளத் தமிழர்கள் அமைதியாகவும் சம அந்தஸ்துடனும் வாழ முடியும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண முதல்வர்களோ, மாகாண சபைக்கோ உறுதியளிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

8. ஜெனிவா, ஐநா மனித உரிமை ஆணையத்தில் நிலுவையில் உள்ள ஈழத் தமிழர்கள் இன அழிப்பு குறித்தான நியாயம் தமிழர்களுக்கு தீர்ப்பாணை மூலம் கிடைக்க வேண்டும்.

9. தமிழர்களுக்கு அரசியல் தீர்வுக்கு பொது வாக்கெடுப்பு அயலக பொறிமுறை கண்காணிப்பில் நடத்தவேண்டும்.

10. இன அழிப்புக்கான நியாயம் கிடைக்க சர்வதேச சுதந்திரமான நம்பிக்கையான புலனாய்வும், நீதி விசாரணையும் நடத்தவேண்டும்.

11. வடக்கு கிழக்கு மாநிலம் சைவ மதத்தின் கேந்திரப் பகுதிகளாகும். அங்குள்ளத் தமிழர்கள் வணங்கும் இந்து மத கோவில்கள் படிப்படியாக அழிக்கப்படுகிறது. தமிழர் கலாசாரத்தைப் பாதுகாத்து முறைப்படுத்த வேண்டும். இப்படி அழிக்கப்படும் இந்து மத கோவில்கள் என நீண்ட பட்டியலே உள்ளது.

12. இந்து மகா சமுத்திரம் அமைதி மண்டலமாகவும் இந்தியாவின் ஆளுமைக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். அமைதி மண்டலமாக இருந்த இந்தியப் பெருங்கடலை பதற்றமான சூழ்நிலையில் மாற்றியதற்கு காரணமாக இருந்தது இலங்கை தான். இது எதிர்காலத்தில் பாதுகாப்பிற்கான சிக்கல்களை உருவாக்கும் என்பதை மத்திய அரசு உணரவேண்டும்.

இலங்கை அரசு, எப்போதாவது ஒருநாள் தமக்கு முழுமையான ஆதரவு நாடாக மாறும் என்ற எதிர்பார்ப்பில் உள்ள இந்தியாவின் 50 ஆண்டுக்கால “இலவு காத்த கிளி இந்தியாவின் வெளிநாட்டு கொள்கை” ஆகி விட்டது.

## 2020 இல் ருவிட்டரில் அதிகம் பேசப்பட்டவர்கள் யார் தெரியுமா ?



2020 ஆம் ஆண்டு ருவிட்டரில் மக்களால் அதிகம் ருவீட் செய்யப்பட்ட நபர்களில் டிரம்ப், பைடன் முறையே முதல் இரண்டு இடங்களைப் பெற்றுள்ளனர்.

2020 ஆம் ஆண்டில் ருவிட்டரில் மக்களால் அதிகம் பேசப்பட்ட (ட்வீட் செய்யப்பட்ட) நபர்கள் குறித்து ருவிட்டர் வெளியிட்ட பட்டியலில், டிரம்ப், பைடன் முறையே முதல் இரண்டு இடங்களைப் பெற்றுள்ளனர்.

அதிகம் ட்வீட் செய்யப்பட்ட நபர்களின் பட்டியலில் அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, ரேப்பர் கன்யே வெஸ்ட் மற்றும் மறைந்த கூடைப்பந்து ஜாம்பவான் கோபி பிரையன்ட் ஆகியோரும் அடங்குவர்.

தற்போதைய உலக சூழலில் அரசியல் மாற்றத்திற்கான ஒரு முக்கிய தளமாக ருவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்கள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பஸ்மதி அரிசிக்கு சொந்தக்காரன் யார் ?




நாம் உண்கின்ற அரசி வகைளில் மெதுமெதுப்பான நறுமணம் கொண்ட அரசியான பஸ்மதி அரிசிக்கான புவிசார் உரிமையைபெறுவதற்குஐரோப்பிய யூனியன் அமைப்பிடம் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இடையே கடும்போட்டி இடம்பெற்று வருகின்றது.

இந்தியாவின் வட மாநிலங்களில் பிரத்தியேகமாக இந்த அரசி விளைவிக்கப்பட்டு வரும் நிலையில், இதற்கான விசார் உரிமையை இந்தியா கோரியுள்ளது. ஆண்டுக்கு 5 முதல் 7 லட்சம் தொன் வரையிலான பஸ்மதி அரிசியை ஏற்றுமதி செய்கிற பாகிஸ்தானும் இதற்கான உரிமையை கோரி வருகிறது.




## கொரோனா வைரஸ் உலகின் கடைசிப் பெருந்தொற்று நோய் அல்ல !



உலகை தற்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள "கொரோனா" உலகின் கடைசிப் பெருந்தொற்று நோய் அல்ல என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம் கெப்ரியாசிஸ் தெரிவித்துள்ளார். காலநிலை மாற்றத்தையும், விலங்குகளை நலத்தையும் சரி செய்யாமல் மனித குலத்தின் நலத்தை மட்டும் மேம்படுத்தாமல், இவ்வகை தொற்றுக்களை உலகின் கடைசி என கருதிவிடமுடியாது என எச்சரித்துள்ளார்.

இதேவேளை 'டிசீஸ் எக்ஸ்' என்ற இன்னொரு வைரஸ் உலகை அச்சுறுத்தக் காத்திருக்கிறது என்று எபோலா வைரஸைக் கண்டுப்பிடித்த விஞ்ஞானி எச்சரித்துள்ளார்.

எபோலா வைரசானது குரங்கில் இருந்து மனிதர்களுக்கு தாவியதாக முன்னராக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆபிரிக்க நாடான கொங்கோவில் ஒரு பெண்ணுக்கு மர்மக் காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து இப்புதிய வகை வைரஸ் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

## 41 நாடுகளில் பரவியுள்ள உருமாறிய கொரோனா வைரஸ்



பிரித்தானியாவில் உருமாறிய கொரோனா வைரஸ் தற்போது 41 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் பரவியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட 501லு. ஏ2 உருமாறிய கொரோனா வைரஸ் ஆறு நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடக்ககால கொரோனாவை விட உருமாறியுள்ள இந்த புதிய வகை கொரோனா 70 சதவீதம் வேகமாக பரவும் என தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2020 ல் ஊடகத்துறையினர் மீது அதிகரித்த கொலைவெறித் தாக்குதல்கள்






உலகம் முழுவதும் 2020 ல் குறைந்தது 50 ஊடகத்துறையினர் குறிவைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் ஒழுங்கமைந்த குற்றங்கள் (organized crime), ஊழல் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு குறித்து ஆய்வு செய்யும் போது கொலை செய்யப்பட்டதாக ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி வரும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் (Reporters Without Borders) நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

கொரோனா நோய்த்தொற்று காரணமாக, 2019 ஆம் ஆண்டை விட 2020 ஆம் ஆண்டில் களச்செய்தியாளர்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. இதனால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையும் சற்றே குறைந்திருப்பதாக அந்நிறுவனம் கூறியிருக்கிறது. 2019 ஆம் ஆண்டில் 53 ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர்.

மேலும், 2020 ஆம் ஆண்டில் போர் நடக்காத இடங்களில் 68 விழுக்காட்டினர் கொல்லப்பட்டதாக ஆய்வு தெரிவிக்கிறது. 2016 இலிருந்து 10 ல் நான்கு பேர் மட்டுமே போர் நடக்காத சூழலில் கொலை செய்யப்பட்டதிலிருந்து இந்த போக்கு புதியதாக இருக்கிறது. 2019 ஆம் ஆண்டின் 63 விழுக்காட்டை ஒப்பிடும் போது, 2020 ல் 84 விழுக்காடு ஊடகவியலாளர்கள் குறிவைத்து கொல்லப்பட்டுள்ளனர்.

## ஜின்ஜியாங்கில் நடைபெறுவது இன அழிப்பு என்கிறது அமெரிக்கா !




சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் பெரும்பான்மையாக வசிக்கும் உய்கா, இன முஸ்லிம்களுக்கு எதிராக சீன அரசு இன அழிப்பில் ஈடுபடுவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

ரம்ப் நிர்வாகத்தில் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாக இந்த அறிவிப்பை மைக்கேல் பாம்பேயோ வெளியிட்டிருந்தார்.

மேலும் அவரது அறிக்கையில், சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தில் உய்கா இன மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறலில் அந்த நாட்டு அரசு ஈடுபட்டு வருகிறது. அங்கு நடப்பது இன அழிப்பு என்பதை உறுதியாக நம்புகிறேன்.

உய்கா இனத்தை அழிப்பதற்காக சீன அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகி றது. உய்கா பெண்களுக்கு கட்டாயமாக கருத்தடை செய்வது, அவர்களை கொத்தடிமைகளாக வைத்து வேலை வாங்குவது போன்ற நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே தகவல்கள் வெளியாகியுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

# அதிபரானதும் 15 முக்கிய உத்தரவுகளில் ஒப்பமிட்ட ஜோ பைடன் !



அமெரிக்காவின் 46-வது அதிபராக ஜோ பைடன் பதவி ஏற்ற சில மணி நேரங்களில் 15 முக்கிய உத்தரவுகளில் கையொப்பமிடதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதில் முக்கியமானது சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் குடிபெயர்ந்து வாழ்ந்துவரும் வெளிநாட்டவர்களுக்குக் குடியுரிமை வழங்கும் மசோதா, கிரீன் கார்டு வழங்குதல் போன்றவையாகும்.

இந்த மசோதாவில் கையொப்பமிட்டு நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டால் கடந்த 8 ஆண்டுகளாகக் குடியுரிமை இல்லாமல் இருக்கும் வெளிநாட்டவர்களுக்கு வதிவிட அனுமதி கிடைக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை முஸ்லிம் நாடுகளில் இருந்து மக்கள் வருவதற்கான தடையை விலக்குதல், பருவநிலை மாறுபாட்டு ஒப்பந்தத்தில் மீண்டும் இணைதல், கெரோனாவைக் கட்டுப்படுத்தும் வகையில் அடுத்த 100 நாட்களுக்கு மக்கள் கட்டாயமாக முகக்கவசம் அணிதல், மக்களுக்குப் பொருளாதார உதவி, அதிபர் ட்ரம்ப் நிர்வாகத்தில் தவறாக எடுக்கப்பட்ட முடிவுகளைத் திரும்பப் பெறுதல் போன்றவை அந்த உத்தரவுகளில் உள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

உலக சுகாதார அமைப்பிலிருந்து அமெரிக்கா ட்ரம்ப் நிர்வாகத்தில் வெளியேறியது. நிதியுதவியையும் நிறுத்தியது. அமெரிக்கா, உலக சுகாதார அமைப்பில் மீண்டும் இணைந்து நிதியுதவி வழங்கும். உலக சுகாதாரக் கூட்டத்திலும் அமெரிக்கா வருங்காலத்தில் பங்கேற்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆப்பிரிக்காவில் கொரோனா நிலைவரம் என்ன ?



மேற்குலக ஊடகங்களில் அதிகம் பேசப்படாத ஆபிரிக்க கொரோனா நிலைவரத்தில், அங்கு இதுவரை 30 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் ஆப்பிரிக்க நோய் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது.

80 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கெரோனாவுக்கு பலியாகி உள்ளதோடு, ஆப்பிரிக்க கண்டத்தில் தென் ஆப்பிரிக்கவில்தான் அதிக படியான கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. தென் ஆப்பிரிக்காவை தொடர்ந்து துனியா, மொராக்கோ, எத்தியோப்பியா நாடுகளிலும் கொரோனா தொற்று அதிகம் ஏற்பட்டுள்ளது.




# கொரோனா எதிரொலி : ஜப்பானில் தற்கொலைகள் அதிகமானது !



கொரோனா பொதுமுடக்கம் காரணமாக கடந்த பத்து ஆண்டுகளில் இல்லாத அளவு ஜப்பானில் தற்கொலைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2009ஆம் ஆண்டுக்குப் பிறகு 2020ம் ஆண்டில்தான் தற்கொலை சதவீ தம் அதிகரித்துள்ளது. அண்ளவாக 20,000க்கும் அதிகமானவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர். 13,943 ஆண்களும், 6,976 பெண்களும் தற்கொலை செய்து கொண்டனர்.

இது 2019ஆம் ஆண்டை ஒப்பிடும்போது 3.7 சதவீதம் அதிகம். 2009ம் ஆண்டில் ஜப்பானில் தற்கொலைகள் அதிகமாக இருந்தன. அதன் பிறகு தற்கொலைகளின் எண்ணிக்கை குறைந்து வந்த நிலையில் கொரோனா பொது முடக்கம் காரணமாக மீண்டும் தற்கொலைகள் அதிகரித்துள்ளன அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

ஜப்பானில் 3 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனா வைரசால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடதக்கது.

# அகதிகளின் இடுகாடாக கடல் ?



தமிழர் தாயகத்தின் வவுனியாவைச் சேர்ந்த தந்தை ஒருவர், தனது மகன் பிரான்சுக்கு செல்வதற்காக மொரோக்கோ நாட்டில் இருந்து கடல் மார்க்கமாக பயணித்த வேளை விபத்துக்குள்ளாகி இறந்து விட்டதாக செய்திகள் வந்திருந்த நிலையில், தனது மகனின் உடலினை நாட்டுக்கு மீளக் கொண்டுவருவதற்கு உதவி கோரிய தகவல்




ஒன்று சமீபத்திய வாரங்களில் சமூகவலைத்தளங்களில் பகிரப்பட்டிருந்தமையினை நாம் அனைவரும் அவதானித்திருப்போம்.

இவ்வாறான துயரச்சம்பவங்கள் புதிதல்ல. 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பா நோக்கிய பயணத்தில் இத்தாலிக்கு கப்பல் மூலம் வந்த பல தமிழர்கள் கடலுக்குள் மாண்டுபோன துயரமான சம்பவங்கள் தொட்டு ஆபத்தான புலப்பெயர்வில் பல தமிழர்கள் மாண்டுபோகும் துயரச்சம்வங்கள் நிகழ்ந்து கொண்டே உள்ளன. தமிழர் மீ–தான சிங்கள அரசின் இனப்படுப்கொலை யுத்தம் காரணமாக இடம்பெற்ற புலர்வும், போரின் ஒய்வுக்கு பின்னராக இடம்பெறும் இவ்வாறான ஆபத்தான கடல்வழிப்பயண தேர்வுகள் பலரையும் கவலை கொள்ள வைக்கின்றது.


சிரியா, லிபியா, ஆப்கானிஸ்தான் என பல நாடுகளில் தொடரும் உள்நாட்டு யுத்தங்கள் மக்களை தொடர்ந்தும் புலம்பெயர வைக்கின்றது என்பதனை 2020ம் ஆண்டுக்கான ஐ.நாவின் அறிக்கை புலப்படுத்துகின்றது. அலைந்துழல் அகதிவாழ்வில் மத்தியத்தரைக்கடல் ஊடான புலப்பெயர்வே, உலகிலேயே மிக ஆபத்தான கடல்வழி புலம்பெயர் முயற்சியாகும் என்பதனை இந்த அறிக்கை மீளவும் உணர்த்தியுள்ளது.

இடம்பெயர்வுக்கான ஐ.நாவின் அமைப்பு வெளியிட்டுள்ள 2020க்கான ஆண்டறிக்கையில், ஐரோப்பா நோக்கிய கடல்வழிபயணத்தில் 1 773 உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளன. உலகளவில் கடல்வழி புலப்பெயர்வில் மொத்தமாக 3 174 உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளன. 2019ம் ஆண்டு இது 6 327ஆக இருந்துள்ளது.

பெருகிவரும் அகதிகளின் உயிரிழப்புகளை தடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் கூடிய தீர்க்கமான, தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கை எடுப்பதற்கான ஆற்றல் உலக நாடுகளுக்கு இல்லை என்பதைத் தான் இது காட்டுகிறது என்று லிபியாவிற்கான சர்வதேச அகதிகள் முகமை தலைவர் ஃபெடரிகோ சோடா (Federico Soda) கூறுகின்றார்.

இத்தாலியின் உள்த்துறை அமைச்சகத்தின் அறிக்கையின் படி, 2020ம் ஆண்டில் இது வரைக்கும் 31 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் இத்தாலியில் தஞ்சமைடைய முயற்சித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று காரணமாக பல நாடுகளுக்கு இடையிலான எல்லைகள் மூடப்பட்டிருக்கும் நிலையில், பல ஆயிரக்கணக்கானவர்கள் கடல்வழியே தமது புலம்பெயர்வை முயற்சித்துள்ளனர் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# வெற்றிப் படிகள்




90களின் தொடக்கம். தன் புத்திசையால் தமிழ்த் திரையிசைக்கு புதுஇரத்தம் பாய்ச்சிய ஏர்.ஆர்.ரகுமான், எங்கள் வீட்டுப்பிள்ளை “சாரு”வுக்கும் இசைஇரத்தம் பாய்ச்சினார் என்றால் நம்பவமா முடிகின்றது.

ஆனால் இன்று சாருவின் இசையில் வெளிவரும் ஒவ்வொரு பாடல்களும் அதற்கு சான்றாகவே இருக்கின்றது.

2000ம் ஆண்டுகளின் தொடக்க காலத்தில் ‘படலைக்கு படலை’ எனும் தொலைக்காட்சி நாடகத்தின் ஊடாக புலம்பெயர் தமிழர் வீட்டுப்பிள்ளையாக அறிமுகமாகிய சாரு என செல்லமாக அழைக்கப்படும் சாரங்கன் இன்று இசைக்கு செல்லபிள்ளையாகிய தன்னிசையால் தாலாட்டிக் கொண்டிருக்கின்றார். இவரது சமீபத்திய இசைத்தாலாட்டு “சிறகு”. இலங்கையில் போரினால் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியில் வாழும் உறவுகளுக்காக உருவான பாடல் இது.

கொஞ்சம் சிறகசைத்து பின்னோக்கிச் சென்றால், பதினைந்து வயதிலிருந்து மிருதங்கம் கற்று கொள்ளத் தொடங்கிய சாரு இன்று கஞ்சிரா, கிற்றார், ஒக்ட்டோபாட் என பல்லிசை கருவிகள் இவரது கைகளுக்குள் ரீங்காரமிடுங்கின்றன. இதுமட்டுமல்ல, நடிகராக, தொலைக்காட்சி அறிவிப்பாளராக, இசைஞனாக என பல்துறைகளில் தன்னை தனித்துவமாக அடையாளப்படுத்தியுள்ளார்.

‘1997 இல் பிரான்ஸ் வந்தேன். பரதநாட்டிய நிகழ்ச்சிக்கு மிருதங்கம் வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. சமநேரம் மாவீரர் நிகழ்வுகள் என தேசிய நிகழ்வரங்குகளில் இசையால் பங்களித்தேன். இங்கேதான் பலரது அறிமுகம் எனக்கு கிடைத்தது.” என்கிறார் சாரு.




பிரான்னைச தளமாக



கொண்டு இயங்கிய ரீரீ என் தொலைக்காட்சியில் தொகுப்பாளராக அறிமுகமானது ஓர் விபத்து எனக்கூறும் சாருவுக்கு தெரியுமா, இந்த விபத்தினால்நேயர்கள்எவரும் காயப்படவில்லை என்று. பல நேய உள்ளங்களின் விருப்பத்துக்குரிய ‘நாயகனாக’ வலம் வந்தார் எனக் தொலைக்காட்சியில் கூடப் பணிபுரிந்த சகிந்தன் கூறுகிறார்.

‘முது கலைஞர் திரு ஏ.சி தார்சீஸியஸ் ஐயா அவர்கள் ரிரிஎன் பணிப்பாளராக இருந்த தருணம் அது. நான் முழு நேர பணியாளராக வேலை செய்ய ஆரம்பித்த பின், ஒரு தொலைக்காடசி தொடர் ஒன்று செய்யலாம் என்று தார்சிசியஸ் ஐயாவிடம் கூறியபோது

‘படலைக்கு படலை ‘ இங்கேதான் உருவாகியது. “முது பெருங்கலைஞர் ஏ.சி தார்சீஸியஸ் அவர்களது வழிநடத்தலில் சுதன்ராஜ் இயக்கயிருந்தார். தொடக்ககாலத்தில் “நம்ம பாக்யராஜ் வந்திட்டார்” என்று பலரும் சொல்லும் அளவுக்கு சாருவின் இயல்பான நடிப்பு பலரையும் கவர்ந்திளுத்து வைத்திருந்தது.

‘2008ம் ஆண்டுகளில் ஒஸ்திரேலியாவிற்கு நான் புலம்பெயர்ந்த போது, பெரிதாய் கலைஞர்கள் தொடர்பு இருக்கவில்லை. நல்ல நேரமாக ***GTV*** தமிழ் தொலைக்காட்சியினர் எனக்கு இங்கு வேலை தந்தனர். அது மறுபடியும் பல தமிழ் கலைஞர்களை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தந்தது’ என்கிறார் சாரு.

புதியதொரு வாழ்க்கை, புதியதொரு களம்.

‘என்று தணியும்’ என்ற ஒரு பாடலை சாரு ஒஸ்றேலியாவில் இசைமீட்கவும், பல மேடை நிகழ்வுகளில் தாள வாத்தியக் கலைஞனாகவும் தொடங்க, ஆண்டுக்கு 10-15 நிகழ்ச்சி செய்யும் அளவிற்கு பரப்பாகியது சாருவின் இசையுலகம். குறிப்பாக ஒஸ்திரேலியா-சிட்னியின் பிரபல இசை குழுவான ‘ஈஸ்டர்ன் எம்பையர்’ இசைக்குழுவின் டிரம்ஸ் வாத்திய கலைஞனாக இன்றும் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து



வருகின்றார்.

2013களில் ‘லக்ஸ்மி நாதம்’ எனும் ஒரு பக்திப் பாடல் இறுவட்டு பின்பு 2016ல் ‘தாய் மண்ணே’ எனும் பாடல் இலங்கை சக்தி தொலைக்காடசி வெளியிடப்பட, தன்னை இன்னும் இன்னும் சொந்த இசையமைப்பு பாடல்களை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வத்தைக் தூண்டியது என்கிறார். ‘காதலாகி’ கசிந்துருகிய அடுத்த பாடல்.

சமீபத்தில் சமூகவலைத்தளங்களில் பலரது கண்ணுக்குபட்ட பாடல் ‘மனிதம்’. பின்னர் ‘சிறகு’. இவையிரண்டும் மானிட உணர்வோடு தொடர்புடையாக இருந்தன. ‘கோவிட் 19, பெருந்தொற்றின் தமது உயிரையும் பொருட்படுத்தாது முன்னணியில் நின்று வேலை பார்த்த வைத்தியர்கள், தாதியர்கள், விஞ்ஞானிகள், மற்றும் துப்புரவு தொழிலாளர்களுக்கு நன்றி கூறும்விதமாக ‘ மனிதம் ‘ உருவாகியது எனக்கூறுகின்றார்.

‘படைப்புகளை நாம் வருமான நோக்கத்தில் செய்வதில்லை. இசைத்துறையில் ஒரு அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என்கின்ற ஆசையில் செய்கின்ற படைப்புகளே இவை. உங்களின் ஆதரவுதான் இன்னும் தரமான படைப்புகள் உருவாக வழி செய்யும்.’ என்கிறார்.

உண்மை. அதனால்தான் ஈழமண் வெற்றிப்படிகளில் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

(பேஸ்புக் சமூகவலைத்தளத்தில் எனும் ‘charou ram’ என்று தேடினால் பார்க்க காணமுடியும் சாருவின் பாடல்களை காணமுடியும்)

## கலைவண்ணம்

# மூத்த கலைப்பேராளுமை

## அமரர் ந.கேசவராஜ் நினைவு வணக்கம் நிகழ்வு !







ஈழத்தமிழ் சினிமாவின் முன்னோடியான மூத்த கலைப்பேராளுமை அமரர் கேசவராஜ் நவரட்ணம் அவர்களுக்கான இணை-வழியிலான வணக்க நிகழ்வு, அவரது நண்பர்களாலும் ஆதரவாளர்களாலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கனடா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், நோர்வே, இலங்கை, ஆஸ்திரேலியா நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களின் ஒருங்கிணைவில் இந் நிகழ்வு மிகவும் உணர்வு பூர்வமாக 23.01.2021 சனிக்கிழமை இடம்பெற்றிருந்தது.

தனது கணவர் குறித்த நினைவுகளையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொண்ட அமரர் ந.கேசவராஜ் அவர்களின் மனைவி, கண-வரின் நினைவாக அவரது குடும்பத்தினரால் கேசவராஜின்நண்பர்களதும்கலைஞர்களதும் துணையுடன் 'கேசவராஜன் அறக்கட்டளை' என்ற பெயரில் நலன்புரி நிதியம் ஒன்று அமைக்கப்படும் எனவும், நலிவுற்றிருக்கும் தாயக கலைஞர்களின் வாழ்வியல் வளர்ச்சிக்காக இந்த அறக்கட்டளை துணை நிற்கும் எனவும் திருமதி கமல-ராணி கேசவராஜ் அவர்கள் இந்நிகழ்வில் கருத்துரைந்திருந்தார்.

அகவணக்கத்துடன் ஆரம்பமாகிய அமரர் சேகவராஜ் அவர்களின் நினைவு வணக்க நிகழ்வில் கேசவராஜ் பற்றி கவிஞர் சோதியா அவர்கள் ஆக்கிய விருத்தத்தை திருமதி தாரணி மகாலிங்கள் அவர்கள் நோர்வேயில் இருந்து பாடி வழங்கியதைத் தொடர்ந்து, நண்பர்களால் தயாரிக்கப்பட்ட கலைப் பேரா-ளுமை கேசவராஜ் என்ற ஆவணப்படம் ஒளிபரப்பப்பட்டது. இதனைத் தொடந்து அமரர் கேசவராஜ் அவர்களுக்கு நினைவு வணக்கம் செலுத்தும் வகையில் நினை-வுரைகள் நிகழ்த்தப்பட்டன.

தாயகத்திலிருந்து திருமதி கமலராணி கேசவராஜ், திரு சத்தியன் கோபாலகிருஸ்ணன் (முரளி), திரு ஞானதாஸ் காசிநாதர், திரு யசி-தரன் அந்தோனிப்பிள்ளை, திரு கோபிஷாந் ரவீந்திரன், திருமதி பிரியதர்சினி ஸ்டீபன், திருமதி ஷாலினி சார்ல்ஸ், திரு விமல்ராஜா




சிவலிங்கம், திரு டானியல் சௌந்திரன் திரு மாணிக்கம் ஏரம்பு, திரு மகேந்திரசிங்கம் திரு ஜனந்தன் கேசவராஜ் ஆகியோருடன் பிரபல திரைப்பட இயக்குனர் பிரிசன்ன விதானகே, கனடாவிலிருந்து திரு சிறிஸ்கந்தன் பரமந-ாதன், திரு இலங்கேஸ்வரன், திரு நேரு குணா, பிரான்ஸிலிருந்து திருமதி உத்தமராணி புஸ்பராஜா, திரு குணா ஆறுமுகராஜா, திரு மயூரதன் தேவராசப்பிள்ளை (அஜந்தன்), திரு பரா குமாரசாமி, திரு கமிலஸ் , பிரித்தானியாவிலிருந்து திரு புலவர் கீத பொன்கலன், திருமதி தர்சினி மயூரன், டென்மார்க்கிலிருந்து திருமதி சசிதேவி ரிச ஆகியோர் அமரர் கேசவராஜ் குறித்த தமது நினைவு வணக்க உரைகளை இந் நினைவு வணக்க நிகழ்வில் வழங்கியிருந்தனர். நோர்வேயிலிருந்து திரு. வசீகரன் சிவலிங்கம் கவிதை வடிவில் தமது நினைவ வணக்கத்தை வழங்கியிருந்தார்.

இவருக்கான இணையவழி நினைவுவணக்க நிகழ்வில் கலந்து கொண்டு இரங்கலுரை நிகழ்த்திய பலரும், இவருடன-ான தமது கலைத்துறை பணிகளையும், நினைவுகளையும் எடுத்துரைத்தனர். இவருடைய வெற்றிக்குப் பின்னால் இருந்த இவரது குடும்பத்தினரின் பங்களிப்பையும் எடுத்துரைத்தனர்.

ஈழத்தமிழ் மக்களின் வாழ்வியலில், குறிப்பாக திரைப்படத்துறையில், தன்னார்வமாக இணைந்து கொண்ட அமரர் கேசவராஜன், 1986ம் ஆண்டு தயாரித்து வெளியிட்ட 'தாயகமே தாகம்' என்ற முழுநீள திரைக்காவியத்தின் மூலம், தயாரிப்பாளராக அறிமுகமானார்.

அதனைத் தொடர்ந்து, இவரால் நெறிப்படுத்தி, தயாரிக்கப்பட்ட பிஞ்சுமனம், திசைகள், கடலோரக்காற்று போன்ற திரைக்காவியங்கள் பெருவெற்றியைப் பெற்றிருந்தன.

2009ன் பின்னர் இவரால் தயாரிக்கப்பட்ட 'பனைமரக்காடு' என்ற திரைப்படம் மூலம், போருக்கு பிந்திய தமிழர் தாயகத்தின் காட்சிகளை மீண்டும் திரைமொழியில் காவ-ியமாக தொகுத்திருந்தார்.

இத்திரைப்படத்தின் வெளியீட்டிற்காக 2019ம் ஆண்டு நோர்வே, பிரான்ஸ் நாடுகளுக்கும் வருகை தந்திருந்தார். இந்நிலையில் கடந்த 09.01. 2021 அன்று சுகவீனம் காரணமாக தாயகத்தில் காலமாகியிருந்தார்.

## முகங்கள்

### கவிஞர் தா.பாலகணேசனின் ஓவியங்கள் சில...



